ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:



ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாயநம:

# திவ்யதேசப் பிராட்டிமார் பதின்மரும் தென்புதுவைப் பிராட்டியும்

**ஆசிரியர் : ஸ்ரீ.உ.வே. கோயில் கோமாண்டூர் இளையவில்லி பாஷ்யம் ரங்கராஜன்ஸ்வாமி**

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்
http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# திவ்யதேசப் பிராட்டிமார் பதின்மரும் தென்புதுவைப் பிராட்டியும்


**மங்களாஸாசன ஸ்ரீமுகம்**........................................................................ 3
அணிந்துரை ........................................................................................ 7
**ஸமர்ப்பணம்**.......................................................................................12
**முன்னுரை**...........................................................................................15
1. **ஆறாம் பாட்டு: "புள்ளும் சிலம்பினகாண்"** ............................................17
2. **ஏழாம் பாட்டு: 'கீசுகீசென்று'**...........................................................22
3. **எட்டாம் பாட்டு: 'கீழ்வானம்'**..........................................................27
4. **ஒன்பதாம் பாட்டு: "தூமணி மாடம்"**.................................................30
5. **பத்தாம் பாட்டு: "நோற்றுச் சுவர்க்கம்"** ..........................................32
6. **பதினோராம் பாட்டு: "கற்றுக் கறவை"** .............................................34
7. **பன்னிரண்டாம் பாட்டு: 'கனைத்திளம்'** .............................................38
8. **பதின்மூன்றாம் பாட்டு: 'புள்ளின்வாய்'** ............................................41
9. **பதினான்காம் பாட்டு: 'உங்கள் புழக்கடை'**.........................................45
10. **பதினைந்தாம் பாட்டு: "எல்லேஇளங்கிளியே"** ...................................48
**நிறைவுரை** .........................................................................................52

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:



# மங்களாஸாசன ஸ்ரீமுகம்

அஷ்டகோத்ரம் குமாண்டூர் இளையவில்லி
திருச்சித்திரகூடம் முனைவர் ஸ்ரீமதுபயவே அ. வெ.
ரங்காசாரியார்
அருள்மாரி அருளிச்செயல் ஆய்வகம்
151, மேல வீதி, சிதம்பரம் 608002.

**நூல்**: திவ்யதேசப் பிராட்டிமார் பதின்மரும் தென்புதுவைப் பிராட்டியும்

**ஆசிரியர்**: ஸ்ரீ உ. வே. வித்வான் குமாண்டூர் இளையவில்லி பாஷ்யம் ரங்கராசன் ஸ்வாமி

## வக்த்ரு வைலக்ஷண்யம்

இந்நூலாசிரியர் ஸ்ரீ உ. வே. வித்வான் குமாண்டூர் இளையவில்லி பாஷ்யம் ரங்கராசன் ஸ்வாமி அனைத்துலகும் வாழப்பிறந்த பகவத் ராமாநுஜரின் சிறிய தாயார் வம்சத்தில் அவதரித்த பெருமையைப் பெற்றவர். உயர்ந்த பணியைச் சிறப்பாக நிர்வஹித்து தன்னுடைய நேர்மையாகவும் கடின உழைப்பாலும் IRS பட்டம் அளித்துப் பராட்டப்பெற்றவர். நிறைகுடமாக விளங்கியதால் எளிமையும் அடக்கமும் உடையவராய் வைணவ உலகில் தனக்கு ஒத்தாரும் மிக்காரும் இல்லாத மஹாபுருஷராக ஆச்சார்ய ச்ரேஷ்டராகத் திகழ்பவர். அதனால் பல நூல்கள், ஆராய்ச்சி கட்டுரைகள்,உபந்யாசங்கள் அவ்வப்போது நிகழ்த்தி அனைவராலும் மதிக்கப்பெறும் மாமேதையாகப் போற்றப்படுபவர்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## பிரபந்த வைலக்ஷண்யம்

ஸ்ரீராமானுஜருக்கு திருப்பாவை ஜீயர் என்று பெயர். ஸ்ரீராமானுஜருக்கு இளையவில்லியின் மரபில் தோன்றிய இந்நூலாசிரியரும் ராமானுஜரைப் போலவே திருப்பாவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நாலாயிர திவ்யபிரபந்தத்தில் உள்ள இருபத்து நான்கு பிரபந்தங் களில் திருப்பாவையே மிகவும் சிறந்ததாகப் போற்றப்படுவது. "வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" என்பர். அதன் காரணமாகவே வைணவத்தில் திருப்பாவைக்குத் தனிப்பட்ட ஏற்றம் உண்டு.

## விஷய வைலக்ஷண்யம்

திருப்பாவையில் கண்ணனை வழிபடச் செல்லும் ஆண்டாள் அடியார்களை முன்னிட்டுக் கொண்டே செல்ல வேண்டும் என்ற வைணவ நெறியைக் கடைபிடித்தாள். அதனால் தமது திருப்பாவையில் ஆறாம் பாசுரம் முதல் பதினைந்தாம்பாசுரம்வரை பத்து பெண்களை எழுப்பி அழைத்துக்கொண்டு போய் கண்ணனை சேவித்ததாக திருப்பாவை அமைந்துள்ளது. இந்தப் பத்துப் பெண்கள் யாவர் என்ற ஆராய்ச்சி முன்னோர்களால் செய்யப்பட் டுள்ளது. இவர்கள் பத்து ஆழ்வார்களா ஆசார்யர்களா என்பதை ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி தமது ஸ்வாபதேச உரையில் எடுத்து காட்டியுள்ளார். அவரே 'பதின்மரும் பிராட்டிமாரோடே ஒக்க உரைக்கலாம்படியான அறுவகை குணபூர்த்தி உடையவர்கள்' என்றும் அருளிச் செய்கிறார். அவ்வாறு ஆண்டாள் கருதியிருக்கக்கூடிய பிராட்டியார் யாராக இருக்கலாம் என்ற விஷயத்தை இந்நூலாசிரியர் தமது ஆழமான புலமையையும் ஆராய்ச்சித் திறனையும் கொண்டும் இவ்வாய்வு நூலைப் படைத்துள்ளார்.

இந்த பத்து பிராட்டிகளும். ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த நாச்சியார் திருமொழியில் மங்களாசாசனம் செய்யப்பட்ட

(ஸ்ரீவில்லிபுத்தூர் தவிர) பத்து திவ்யதேசத்தில் எழுந்தருளி யிருக்கும் பிராட்டிமார்களே என்று ஆய்வு நிறைவு செய்துள்ளார்.

அவையாவன

1) 6 ஆம் பாசுரம் திருஆய்ப்படாடி திவ்யதேசப் பிராட்டி
2) 7 ஆம் பாசுரம் வடமதுரை திவ்யதேசப் பிராட்டி
3) 8 ஆம் பாசுரம் துவாரகை பிராட்டி
4) 9 ஆம் பாசுரம் திருப்பாற்கடல் பிராட்டி
5) 10 ஆம் பாசுரம் திருக்கண்ணபுர நாயகி
6) 11 ஆம் பாசுரம் திருவரங்கம் ஸ்ரீரங்க நாயகி
7) 12 ஆம் பாசுரம் திருவேங்கடம் பத்மாவதித் தாயார்
8) 13 ஆம் பாசுரம் திருக்குடந்தை கோமளவல்லி
9) 14 ஆம் பாசுரம் பரமபதம் பெரிய பிராட்டியார்
10) 15 ஆம் பாசுரம் திருமாலிருஞ்சோலைமலை சுந்தரவல்லி

இதனை ஆய்வு நோக்கில் நிரூபிக்கும் போது வேதம், இராமாயணம், பாரதம், பாகவதம், ஆழ்வார் பாசுரங்கள், அவற்றின் வ்யாக்யானங்கள், ஆசார்யர்கள் அருளிச்செய்துள்ள ஸ்தோத்ரபாடங்கள், விஷ்ணு ஸஹஸ்ரநாமம், அதனுடைய பட்டர் பாஷ்யம், திருக்குறள் ஆகியவற்றிலுள்ள உபயவேதாந்த, ஆழ்ந்த பரந்த நுண்மான் நுழைபுலம், பாண்டித்யம் ஆகியவை பக்கம்தோறும் பளிச்சிடுகின்றன. அதனால் மிகவும் பொருத்தமாக விளக்கியுள்ளார். ஆண்டாள் இன்னிசையால் பாடிக்கொடுத்தாள் என்பதற்கு ஏற்ப இந்நூலாசிரியர் திவ்யதேச பாசுரங்களுக் கான பண்கள், அவை பாடும் காலம் முதலியவற்றை இந்தளம் சீகாமரம் தக்கேசி முதலியவற்றை எடுத்துக்காட்டியுள்ளது ஆசிரியரின் பரந்த ஞானத்திற்குச் சான்று பகர்கின்றது.

இவ்வாறு தலைச் சிறந்த ஆராய்ச்சி நூலை ஸ்ரீவைணவ உலகிற்கு அளித்த இந்நூலாசிரியர் ஸ்வாமிக்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்.

இம்மாதிரியான ஆராய்ச்சி நூல்களை ஸ்ரீ உ.வே வித்வான் K E B ரங்கராஜன் அருள அருள் புரியும்படி அருள்மாரி திருவடிகளில் ப்ரார்த்தித்து வணங்கி பல்லாண்டு பாடுகிறேன்.

அ. வே. ரங்காசாரி
திருவேடுபறி நாள்..

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:



# அணிந்துரை

டாக்டர் எம்.எஸ். வெங்காடாச்சாரியார்
எம்.ஏ.எம்.பில். பிஎச்டி.,

“திருவேங்கடமாமலை”
“பெருமாள் கோயில்,
தெற்கு வீதி,
காட்டுமன்னார்கோயில்
30.09.2019

# முன்னுரை

தேவஸ்ய மஹிஷீம் தி$^{3}$வ்யாம்
ஆதௌ கே$^{3}$ாத$^{3}$ா முபாஸ்மஹே$^{1}$
யந்மௌவி மாலிகாம் ப்ரீத்யா
ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு:

வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ் ஐய்யைந்துமைந்துக்கும் வியாக்யானம் அருளிச்செய்த வித்தகர்களுள் முதலிடம் பெறுபவர் பெரியவாச்சான்பிள்ளை ஆவார். அவருக்குப்பின் பிள்ளை உலகாரியரின் திருத்தம்பியார் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், பெரியவாச்சான்பிள்ளை அருளிய மூவாயிரப்படியைத் தழுவி “ஆறாயிரப்படி” வியாக்யானம் அருளினார். ஈட்டுப்ரவர்த்தகர்களுள் சிறப்பிடம் பெறும் நாலூராச்சான்பிள்ளை (தேவராஜர்) சீடரான “ஜநந்யாசாரியர்” (ஆய்) என்னும் ஆசாரியர் திருப்பாவைக்கு ஈருரைகள் வரைந்தார் (ஈறாயிரப்படி, நாலாயிரப்படி) இவை தவிற சுத்த ஸத்வம் தொட்டாசார்ய ஸ்வாமியும் முதல் வானமாமாலை ஸ்வாமியும் ஸ்வாபதேச வியாக்யானங்களை அருளிச் செய்துள்ளனர். காஞ்சிபுரம் ஸ்ரீ.உ.வே பிரதிவாதி பயங்கரம் அண்ணா ஸ்வாமி மூன்று உரைகள் அருளியுள்ளார். முன்னோர் மொழிந்த பேருரைகளைப் பயின்று அவர்கள் வழியில் ஆண்டாள் தம் தோழியரை எழுப்பும் பாசுரங்களுக்கு ஸ்வாபதேச வியாக்யானம் ஒன்றினை ஸமர்ப்பிக்க விழைந்து, கோயில் கொமாண்டூர் இளையவில்லி பாஷ்யம்

ரங்கராஜாசார்ய ஸ்வாமி ‘‘திவ்ய தேசப் பிராட்டிமார் பதின்மரும்–தென்புதுவைப் பிராட்டியும்’’ - என்னும் தலைப்பில் நூலொன்றினை அருளிச்செய்துள்ளார். அஜ்ஞனான அடியேனை அணிந்துரை எழுத நியமித்தார். அடியேன் யதாசக்தி யதாமதி விண்ணப்பிக்கிறேன். பிழை பொறுத்தருள வேணும்.

## வக்த்ரு வைலக்ஷண்யம்

உலகம் உய்ய அவதரித்த உடையவர் பேரன்புக்குப் பாத்திரரான இளையவில்லியாச்சான் மரபில் உதித்த பாக்யம் பெற்றவர். நல்ல கல்வியாளர், ஆசார்ய புருஷர் லௌகிக ஸாமர்த்யம் பெற்றவர், மத்திய அரசில் பெரும்பதவியை வகித்து நிறைவுபெற்றவர் ஸம்ப்ரதாயகிரந்தங்களில் ஆழ்ந்த புலமை பெற்றவர், எளிமையானவர், ஆழ்வார் பாசுரங்களில் ஈடுபாடு கொண்டவர். நம்மாழ்வார் மணிவல்லியாக ஆனார். அவரைப் பின்பற்றி நம் நூலாசிரியர் மணிரங்கன் ஆனார். அவர் ‘‘மாறன்கலை’’ என்றொரு நூலையும் அருளியுள்ளார். திவ்யதேச ஸம்ப்ரோக்ஷணைகள், ததீயாராதனங்கள், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பகுமானங்கள் செய்தல் முதலான நற்காரியங்களில் ஈடுபடுபவர். தற்பெருமையில்லாதவர், நல்ல உபந்யாஸகர், ‘‘சந்தி வேள்வி சடங்கு நான் மறை ஓதி ஓதுவித்து ஆதியாய் வரும் அந்தணாளரறா அணியாலி’’யில் நித்யவாஸம் செய்கிறார்.

## விஷய வைலக்ஷண்யம்

நூலாசிரியர் பெரியோர்கள் வழி நின்று இந்நூலை அருளியுள்ளார். இவர் தம் நூலில் நாலாயிர திவ்யப்பிரபந்தம், ஸ்ரீ விஷ்ணுஸஸ்ரநாம பாஷ்யம், திருவாய்மொழி வியாக்யானங்கள், திருக்குறள், திவாகர நிகண்டு முதலான நூல்களின் துணையுடன் தம் கருத்துகளைத் தந்துள்ளார்.
இவர் தம் நூலில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்துக்கு முதன்மை தந்துள்ளார். அதற்கு முக்கியமான காரணம்: ஸ்ரீ பராசபட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யத்தையும் திருப்பாவைக்கு வடமொழியில் தனியனையும் அருளியுள்ளார். ஆண்டாள் ஹ்ருதயத்தை அவர் நன்கறிந்தவர். மேலும் திருநாமங்கள் திவ்யதேச எம்பெருமான்களைக் குறிப்பதாகவும் காட்டியுள்ளார். ஆகையால் ஆசிரியர் தம் கருத்தை நிறுவ அவர் நூலைப் பயன் கொண்டுள்ளார் எனலாம்.

ஆண்டாள் தம் தோழிமார்களை எழுப்பும் பாசுரங்கள் பத்து: அவர் அவதரித்த திவ்ய தேசத்தைத் தவிர்த்துக் கணக்கிட்டால் நாச்சியார் திருமொழியில் பத்து திவ்ய தேசங்கள் இடம் பெற்று உள்ளன. அவை 1.திருவாய்ப்பாடி, 2.வடமதுரை, 3.திருத்துவாரகை, 4.திருப்பாற்கடல், 5.திருக்கண்ணபுரம், 6.ஸ்ரீரங்கம், 7.திருவேங்கடம், 8.திருக்குடந்தை, 9.திருப்பரமபதம், 10.திருமாலிருஞ்சோலை.

தாம் கொண்ட கருத்தினை மேற்கோள் நூல்களைத் துணைகொண்டு திருப்பாவைப் பிரதீகங்களுக்கு விளக்கம் தந்து நிறுவியுள்ளார். கருத்துகள் பொருத்தமாக அமைந்துள்ளன. நல்ல முயற்சி பாராட்டுக்குரியது. இவருக்கு இப்படி நூல் எழுத எண்ணம் எப்படி வந்தது? என்று யோசித்தேன். இறைவன் அடியேன் உள்ளத்தில் எழுதியதை ஓலை இடுகிறேன்.

ஸ்தாலிபுலாக நியாயம் (ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்) என்னும் நியாயப்படி திருப்பரமபதப் பிராட்டியைத் துயிலுணர்த்துவதற்கான காரணம் மட்டும் தெரிவிக்கிறேன்.

ஆண்டாள் அஞ்சுகுடிக்கொரு சந்ததி ஆவாள். ஆண்டாளின் பெரிய தகப்பனார் நம்மாழ்வார் ஆவார். அவர் தம் திருவாய்மொழிப் பாசுரத்தில் ஹரிவம்ச புராண வரலாறு ஒன்றினைப் பதிந்துள்ளார். அப்பாடல் வருமாறு:

இடரின்றியே ஒருநாளொரு போழ்தில் எல்லாவுலகுங்கழியப்
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடனேறத் திண்தேர்கடவிச்
சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை
உடலொடுங் கொண்டு கொடுத்தவனைப் பற்றி ஒன்றுந் துயரிலனே.
திருவாய்மொழி 3-10-5

ஹரிவம்சம் அஷ்டசத்தம் அத்யாயத்தில் யுதிஷ்டிரர் அர்ஜூநனுக்குக் கூறிய கதையொன்று இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. அந்தக் கதை வருமாறு:

ஒரு பிராமணன் மனைவிக்கு மூன்று பிள்ளைகள் வரிசையாகப் பிறந்தன. அப்பிள்ளைகள் பிரசவமானவுடன் பெற்றவளும் காணாதபடி மறைந்தன. நான்காம் முறை பிரசவவேளை வரும் பொழுது அந்த அந்தணன் கண்ணனைச் சரணடைந்து நான்காம் குழந்தையையாவது காப்பாற்றித் தர வேண்டினான். கண்ணன் யாக தீக்ஷையில் இருந்தான். காலை யாக காரியங்கள் நிறைவேறினபின் மாலை யாக காரியங்களில் பங்கேற்க வேண்டும். அதை நன்கறிந்த அர்ச்சுனன் பிராமணனுக்குத் தான் உதவுவதாகக் கூறி அவனுடன் அவன் இல்லம் சென்றான். பிரசவ அறையைத் தன் அம்புகளால்

கோட்டை போலக் கட்டினான். குழந்தை பிறந்தது, காணாமல் போயிற்று. அந்தணன் அர்ச்சுனனை இகழ்ந்து அவன் செய்த செயலால் தனக்கு ஏற்பட்ட இழப்பைக் கண்ணனிடம் கூறினான். கண்ணன் புன்சிரிப்புடன் அர்ச்சுனனைத் தேரோட்டும் சாரதியாகவும், அந்தணனை உடன் நண்பராகவும் ஏற்றிக் கொண்டு அண்டங்களைக் கடந்து திருப்பரமபத எல்லையில் நிறுத்தினான். பிறகு தான் மட்டும் திருப்பரமபதத்தில் இருந்த பிராட்டிமார் அறையுள் சென்று அங்கிருந்த நான்கு குழந்தைகளையும் பிறந்தபோது இருந்தவாறே மீட்டுக் கொண்டு வந்து பிராமணனிடம் சேர்த்தான். (திருப்பரமபதத்தில் கால பரிணாமமில்லை) பரமபதப் பிராட்டிமார்கள் தாம் பிராமணன் குழந்தைகளைக் கவர்ந்து சென்றனர் என்று கண்ணனுக்குத் தெரியும். பரமபதத்துப் பிராட்டிமார்கள் கண்ணனை அவதார காலத்தில் திருமேனியைக் காண இந்த விளையாட்டை (குழந்தையைக் கவர்தல்) நிகழ்த்தினர் என்று ஹரிவம்ச செய்தி கூறுகிறது. அந்தச் சுலோகம் வருமாறு:

"ஸ்ரீபகவானுவாச:-

"மத்³த³ர்சநார்த²ம் தே பாலா
ஹ்ருதாஸ்தேந மஹாத்மநா
விப்ரார்த² மா³கதே க்ருஷ்னே
மா க³ச்சே² தந்ய தே² திஹ"
சுலோக எண் 8

(இப்பகுதி ஸ்ரீமன் மணவாள மாமுனிகளின் ஈட்டின் பிரமாணத்திரட்டிலிருந்து தரப் பெறுகிறது. மாமுனிகளுக்கு அடியோறுடைய நன்றிகலந்த வணக்கத்தை ஸமர்ப்பிக்கிறேன்.)

இதனால் திருப்பரமபதப் பிராட்டிமார்கள் கண்ணனை அவதார காலத்தில் அவன் திரு மேனியை ஸேவிக்க ஆசைப்பட்டனர் என்பது வெளிப்படை. ஆகவே ஆண்டாள், கண்ணனை ஸேவிக்க அழைத்துத் துயிலுணர்த்தும் போது அவர்கள் ஆசையோடு போட்டி போட்டுக் கொண்டு வருவர். ஆகவே திருப்பரமபதப் பிராட்டியை, ஆண்டாள் துயிலுணர்த்துவது சாலப்பொருத்தம் உடையது. இந்தக் கருத்தை ஆசிரியர் உணர்ந்து தம் நூலில் அமைத்தார் என்பது எண்ணி மகிழத்தக்கதாகிறது. திருமங்கையாழ்வார் மாறன்மறைக்கு ஆரங்கம் கூற அவதரித்தவர். அவரும் பெரியதிரு மொழியில் "வேதவாய்மொழி அந்தணன்" (பெரியதிருமொழி 5-8-8) என்று தொடங்கும் பாடலில் இக்கருத்தை உரைத்துள்ளார்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

ஆசிரியர் திருவாலியில் நித்யவாஸம் செய்பவர், அவர் திருமங்கையாழ்வார் ‘‘பொன்னானாய்’’ என்னும் திருநெடுந்தாண்டகப்பாசுரத்தில் சுட்டிய நான்கு யானைகளைப் பெரியவாச்சான் பிள்ளை கருத்தைப் பின்பற்றி, அவ்வத் திவ்ய தேசப்பிராட்டிமார்களைத் துயிலுணர்த்துவதாகக் காட்டியுள்ளார்.

(வடக்கு – திருவேங்கடம், தெற்கு – திருமாலிருஞ்சோலை, மேற்கு – திருவரங்கம், கிழக்கு – திருக்கண்ணபுரம்)
ஆண்டாள், நாச்சியார் திருமொழியில் பதினொன்றாம் பதிகத்தில் ஸ்ரீரங்கநாதனைப் பாடியுள்ளார். ஆசிரியர் பதினொன்றாம் பாசுரத்தில் திருவரங்க நாச்சியாரைத் துயிலுணர்த்துவதாகக் கூறியுள்ளார்.

பொதுவாக இவருடைய கருத்துகள் நன்கு பொருத்தமாக அமைந்துள்ளன. விரிவஞ்சி அடியேன் அணிந்துரையை நிறைவு செய்கிறேன். ஆசிரியருக்குப் பல்லாண்டு! பால்லாண்டு! பல்லாண்டு! பாடி அமைகிறேன். அவருக்கு எல்லா நன்மைகளையும் அருள ஸ்ரீமந்நாதமுனிகள் ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளைப் பணிகிறேன்.

காட்டுமன்னார் கோயில்
பங்குனி உத்தராடம்
கச்சிக்கடாம்பு
30.03.2019

தாஸனுதாஸன்
காட்டுமன்னார் கோயில்
வேங்கடார்யதாஸன்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீபாலதந்வி மஹாகுரவே நம:



**திவ்யதேசப் பிராட்டிமார் பதின்மரும் தென்புதுவைப் பிராட்டியும்**

## ***ஸமர்ப்பணம்***

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுடைய பரம க்ருபையாலே 'திவ்யதேசப் பிராட்டிமார் பதின்மரும் தென்புதுவைப் பிராட்டியும்' என்னும் தலைப்பின் கீழ் இவ்வாய்வு நூலை ஸ்ரீவைஷ்ணவ நல்லடியார்களின் திருவுள்ள உகப்பிற்காக விண்ணப்பிக்க ப்ராப்தமாகிறது.

நிகழும் விளம்பி ஆண்டு மார்கழி மாதத்தில் Facebook (Bahyam Rangarajan) மற்றும் WhatsApp வாயிலாக ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்துள்ள திருப்பாவையில் ஆறாவது பாசுரம் முதல் பதினைந்தாவது பாசுரம் வரையிலான பாசுரங்களில் காணப்பெறும் சில விசேஷார்த்தங்களை விண்ணப்பிக்க நேர்ந்தது. அதனைக் கண்ணுற்ற ஸ்ரீ உ.வே. T.C.A வெங்கடேசன் ஸ்வாமி அதனைத் தொகுத்து e-book ஆக தமது acharya.org websiteல் வெளியிட அனுமதி கேட்டிருந்தார். அடியேன் ஒப்புதலைத் தெரிவிக்கையில் இன்னும் சற்று விரிவாக எழுதித் தருவதற்கு கொஞ்சம் கால அவகாசம் தேவை என்று தெரிவித்தேன்.

அவரும் சரி என்று சொல்ல இப்போது இந்நூல் முடிவடைந்து அடியேன்பால் பேரன்பும் பாசமும் மிக்கப் பெருந்தகையோரான அஷ்டகோத்ரம் குமாண்டூர் இளையவில்லி திருச்சித்திரகூடம் முனைவர் ஸ்ரீமதுபயவே அ. வே.

ரங்காசாரியார் ஸ்வாமியின் மங்களாஸாசன ஸ்ரீமுகத்துடனும், காட்டுமன்னார் குடியில் எழுந்தருளியிருக்கும் முனைவர் ஸ்ரீமதுபயவே எம் எஸ் வேங்கடாச்சாரி ஸ்வாமியின் அணிந்துரையுடனும் வெளியிடப்படுகிறது.

திருச்சித்திரகூடம் ஸ்வாமி கண்புரைக்கான அறுவைசிகிச்சை மேற்கொண்டு 15 நாட்கள் ஆன நிலையில் வரைவு (Draft) நூலை முழுமையாகப் படித்து திருத்தங்கள் செய்து அவர் தம் கைப்பட மங்களாசாஸன ஸ்ரீமுகம் ஸாதித்தருளியது மஹாபரோபகாரமே ஆகும்.

ஸ்ரீமந்நாதமுநி ஆளவந்தார் ஸன்னிதி முதல் தீர்த்தகாரரான காட்டுமன்னார்கோவில் ஸ்வாமியின் அணிந்துரையையும் நாதமுனி முதலான நம் தேசிகர் அனைவரும் வழங்கியதாகவே கருதி சிரம் மேற்கொண்டு வணங்கி தாள் பணிகின்றேன். ஸ்வாமி அவ்வப்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு விஷய தானம் செய்தருள்வார். செய்யாறு கலைக் கல்லூரியில் தமிழ்ப்ராத பேராசிரியர் என்பதற்கு ஏற்ப நுட்பமாக ஆராய்ந்து இலக்கணப் பிழை திருத்தம் மட்டுமே அல்லாமல் வாக்கியங்களை ஒழுங்கு படுத்தி காட்டியருளினார்.

இவ்விருவரும் தங்களுக்கு இருந்த பற்பல பகவத் கைங்கரியங்களிடையே வரைவு (Draft) நூலைப் பூரணமாகப் படித்தும் தக்க முறையில் திருத்தங்கள் செய்தும் அடியேனை ஊக்கவித்தமைக்கும் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவனாவேன்.

இந்நூலினைத் தமது acharya.org websiteல் வெளியிட வாய்ப்பளித்த ஸ்ரீ உ.வே. T.C.A வெங்கடேசன் ஸ்வாமிக்கு ஸ்வரூபானுரூபமான மங்களாசாஸனங்கள்.

ஆழ்வார் திருநகரியில் நித்யவாசமாய் எழுந்தருளி இருக்கும் அடியேனுடைய ஞானகுருவும் ஞானபிதாவுமான ஸ்ரீமதுபயவே இளையவில்லி சடகோப பூவராஹாச்சார் ஸ்வாமி திருவடிவாரத்தில் பல நாட்கள் கேட்டறிந்து அடியேனிடத்து அவர்

செலுத்திவரும் அபிமானம் கொண்டே இந்நூலை வழங்கப் பிராப்தமாயிற்று. இரும்பைப் பொன்னாக்கும் இரசாயனக் குளிகை போன்ற ஆசார்யாபிமான நிழலில் ஒதுங்கினபடியால் அடியேன் சிந்தனை பிறழாது என்று ஆசீர்வதித்தவர். இந்நூல் நிறைவு பெறும் நேரத்தில் திருவாலியில் ஸம்பிரதாய விஷயங்கள் பரிமாறிக் கொள்வதில் அடியேனின் உற்றதுணையான ஸ்ரீ உ.வே. பரவஸ்து. தி. ஸ்ரீநிவாசன் ஸ்வாமி ஆழ்வார் திருநகரியில் அடியேன் ஞானாசிரியரைத் தெண்டன் சமர்ப்பிக்க ஸ்வாமி திருநெடுந்தாண்டகத்தில் 'செங்கால மடநாராய்' பாசுரத்தை அனுசந்தித்து தனது பிரிவாற்றாமையை அடியேனுக்கு நினைவுபடுத்தும்படிக்கும் கூறினாராம். என்னே ! நினைதொறும் நெஞ்சுருகச் செய்யும் அவர்தம் பாசமும் நேசமும். அதற்குச் சிறிதும் தகுதியற்ற அடியேன் இந்நூலை அன்னாரது திருவடிவாரத்தில் ஸமர்ப்பிக்கிறேன

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீராமநவமியும், அடியோங்கள் குல கூடஸ்தரான இளையவில்லி ஸ்வாமி வருஷ திருநக்ஷத்திரத் திருநாளும், விகாரி சித்திரை வருடப் பிறப்பும் கியவை இணைந்த முப்பெரும் நன்னாளில் வெளியிடப்பெறுவது ஸ்ரீோதா பிராட்டியின் நிர்ஹேதுக க்ருபா கடாக்ஷமே.

தாஸன்
மணியரங்கன்
14-4-2019.

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# திவ்யதேசப் பிராட்டிமார் பதின்மரும் • தென்புதுவைப் பிராட்டியும்



## *முன்னுரை*

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்துள்ள திருப்பாவையில் ஆறாம் பாட்டு முதல் பதினைந்தாம் பாட்டு வரை பத்துப் பெண்களைத் துயிலுணர்த்துவதாகக் காண்கிறோம்.

இப்பாசுரங்களில் அமைந்துள்ள சொற்களைச் சற்று ஆழ்ந்து சிந்திக்க, ஆண்டாளின் தோழிகளாக மதிக்கப்பெறும் இப்பெண்பிள்ளைகள் போல் நமது ஆழ்வார் ஆசார்யர்கள் யாரொருவர் இருந்திருக்கக்கூடும் என்று திருப்பாவைக்கு ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி அருளிச்செய்துள்ள ஸ்வாபதேச உரையில் எடுத்து காட்டியுள்ளார். அவரே பதின்மரும் பிராட்டிமாரோடே ஒக்க உரைக்கலாம்படியான அறுவகைக் குணபூர்த்தி உடையவர்கள் என்றும் அருளிச் செய்தசெய்துள்ளார்.

அவ்வாறு ஸ்ரீ ஆண்டாள் கருதியிருக்கக்கூடிய பிராட்டிமார் யாராக இருந்திருப்பார் என்ற வினா மேலோங்கி நிற்கிறது. ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்துள்ள நாச்சியார் திருமொழியில் மங்களாசாசனம் செய்துள்ள திவ்யதேசப் பிராட்டிமார்களாக இருக்கக்கூடுமா என்றும் பார்க்க வேண்டும். ஸ்ரீஆண்டாள் அருளிச்செய்துள்ள நாச்சியார் திருமொழியில் ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட பதினொரு திவ்யதேசங்கள் மங்களாசாஸனம் செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் தாமே அந்த திவ்யதேசத்துப் பிராட்டியாக எழுந்தருளி இருக்கின்றார்.

பிற பத்து திவ்யதேசங்கள் 1) திருப்பரமபதம் 2) திருப்பாற்கடல் 3) திருஷ ஆயர்பாடி எனும் கோகுலம் 4) கோவர்த்தனம் ப்ருந்தாவனம் உள்ளிட்ட திருவடமதுரை 5) திருத்துவாரகை 6) ஸ்ரீரங்கம் 7) திருவேங்கடம் 8) திருக்குடந்தை 9) திருக்கண்ணபுரம் 10) திருமாலிருஞ்சோலை மலை ஆகியவை.

இவற்றுள் ஆறாம் பாட்டில் திருஆயர்பாடியிலும், ஏழாம் பாட்டில் வடமதுரையிலும், எட்டாம் பாட்டில் துவாரகையிலும், ஒன்பதாம் பாட்டில் திருப்பாற்கடலிலும், பத்தாம் பாட்டில் திருக்கண்ணபுரத்திலும், பதினோராவது பாட்டில் ஸ்ரீரங்கத்திலும், பன்னிரண்டாவது பாட்டில் திருவேங்கடத்திலும், பதின்மூன்றாம் பாட்டில் திருக்குடந்தையிலும், பதினான்காவது பாட்டில் பரமபதத்திலும், பதினைந்தாவது பாட்டில் திருமாலிருஞ்சோலை மலையிலும், எழுந்தருளி இருக்கின்ற பிராட்டிமார்களைத் துயிலுணர்த்துவதாகக் கருத வாய்ப்பு உள்ளது. அதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

## *1.* **ஆறாம் பாட்டு: "புள்ளும் சிலம்பினகாண்"**
## **திருவாய்ப்பாடி திவ்யதேசப் பிராட்டி**

திருப்பாவையில் துயிலுணர்த்தப் பெறும் பெண்பிள்ளை எந்த திவ்யதேச பிராட்டிக்கு இணையாவாள் என்று எண்ணிப் பார்க்கத் துணிந்த அளவில் முன்னம் ஆறாம் பாட்டில் துயிலுணர்த்தப் பெறும் பெண் பிள்ளை திருவாய்ப்பாடி திவ்யதேசத்தில் எழுந்தருளி யிருக்கும் பிராட்டி என்று கருத வாய்ப்புள்ளது.

ஸ்ரீஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகக்கொண்டு பாசுரமருளிச் செய்துள்ளாள் என்பது பொதுவான கருத்து. ஆதலின் முதலில் துயிலுணர்த்தப்பெறும் பிராட்டி திருவாய்ப்பாடி திவ்ய தேசத்துப் பிராட்டியாக எண்ணத் தட்டில்லை.

ஆயர்பாடிக்கு அணிவிளக்காகக் கண்ணன் பிறந்த நாலிரு திங்களில் செய்தனவாகப் பேசப்பெறும் பால லீலைகளில் பேய்முலை நஞ்சுண்டதும் திருக் காலால் சகடம் சாடியதும் திருவாய்ப்பாடியில் தானே. அவை தாமே இப்பாட்டில் சுட்டப்பெறுகின்றன.

“*புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறின*” என்றார் திருத்தகப்பனார் பெரியாழ்வார். அவரது பெண்பிள்ளையான இவளும் அவர் வாக்கை ஒட்டி “ புள்ளும் சிலம்பின” என்கிறார். துளசி வனத்தில் தன்னைக் கண்டெடுத்துத் தனக்குப் பாலும் அமுதுமாகக் க்ருஷ்ண பக்தியைக் கொடுத்து வளர்த்த பட்டர்பிரானைத் திருத்தகப்பனாராக மட்டும் பார்க்காமல் ஆசாரியராகவும் வரித்தவளாயிற்றே.

ஸ்ரீகோதோபமாஷ்டகம் எனும் எட்டு ஸ்லோகங்கள் கொண்ட வடமொழி கிரந்தம் ஸ்ரீவில்லிபுத்தூரில் மார்கழி மாத இறுதியில் திருமுக்குளத்தில் ஆண்டாள் நீராட்டம் கண்டருளும் பொழுது திருமஞ்சனக்கட்டியமாக நாளொன்றுக்கு ஒரு ஸ்லோகமாக அனுஸந்திக்கப்படுகிறது.

இதில் ஆறாவது ஸ்லோகத்தால் கிளிக்கும் ஆண்டாளுக்கும் உள்ள ஸாம்யம் கூறப்படுகிறது. ஒரு ஒற்றுமை '*த்விஜாதிப ஸுதாம்*' என்பது.

முதலில் முட்டை வடிவில் தோன்றி பின்னர் குஞ்சு வடிவெடுப்பதால் பறவைகள் வடமொழியில் த்விஜம் என்று வழங்கப்படுகின்றன. 'த்விஜாதிப' என்று புளளரையனான கருடன். 'த்விஜாதிப ஸுதாம்' என்று கருடனின் பெண்ணாக மதிக்கப்பெறும் பைங்கிளி.

கருடனின் அம்சமான ஸ்ரீவிஷ்ணுசித்தர் த்விஜகுல திலகர் என்கிறபடியே இருபிறப்பாளரான அந்தணர் தலைவர். ஞானமனுட்டானமெனும் இரு சிறகுகள் கொண்ட ஆசார்ய ச்ரேஷ்டர். அவரது திருமகளாராய்த் திகழும் ஆண்டாளின் தந்தையும் ஆசார்யனும் அவரே ஆவார்.

“பிள்ளாய்” என்றது பூஜ்ய வாசக ஸப்தம். ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி அருளிச் செய்த ஸ்வாபதேசத்தில் 'அஸ்மத் குருப்யோ நம:' என்று காட்டுகிறார். ஆதலின் அவரை முன்னம் துயிலுணர்த்தி அவர் துணையோடு திருவாய்ப்பாடிப் பிராட்டியைத் துயிலுணர்த்துகிறார்கள்

கண்ணன்பால் பொங்கும் பரிவுடைய யசோதையாகப் பாவித்துத் தாய்ப் பாசுரமிட்ட அவரைப் புருஷகாரமாகப் பற்றித் திருவாய்ப்பாடிப் பிராட்டியை அன்பு கூர்ந்து 'பிள்ளாய்!' என்று அழைத்துத் துயிலுணர்த்துகிறாள்.

ஸ்ரீவிட்டுசித்தர் பக்ஷிராஜன் திருவம்சமாக திருவவதரித்ததாக சொல்வதுண்டே. இந்தப் புள்ளரையனைப் புருஷகாரமாகப் பற்றிப் 'புள்ளரையன் கோயில்... பிள்ளாய்' என்று கொண்டாடுகிறாளாகவுமாம்.

‘புள்’ என்று பக்ஷியாய், 'அரையன்' என்று தலைவனாய், புள்ளரையன் பக்ஷிராஜ னாகிறான்.

'புள்ளரையன் கோ' என்று 'தாஸஸ ஸகா வாஹனம்' ஆக பக்ஷிராஜன் பணிவிடையை ஏற்கும் எம்பெருமானைச் சொல்லி,

'கோ இல்' என்று அவ்வெம் பெருமானின் இன் துணையும் நற்றுணையுமான பிராட்டியைச் சொல்கிறது. *(மனைவி, கிழத்தி, இல்லாள், இல் என்று அனையவை மருதத் தலைமகட்காகும்/முல்லை நிலத் தலைவிக் கும் ஆகும் திவாகர நிகண்டு - 307, 3088)*

'கோ இல் இல்' என்று
பிராட்டியின் இல்லமாகத் திகழும் திருவாய்ப்பாடி என்றுமாம்.

இந்த புள்ளரையன் கோயிலில் ஒலிக்கும் சங்கம் எம்பெருமானது இடக்கையில் ஏறி வீற்றிருக்கும் வலம்புரிச் சங்கத்தினின்றும் மாறுபட்டது. எங்ஙனே என்னில் *'ஆநிரை மீளக் குறித்த சங்கம்' (பெரியா.திரு. 3-4-3)* என்கிற படியே அந்தச் சங்கமோ கானகம் மேவி மேய்ந்து திரிந்து மாலை வேளையான அளவில் ஆநிரைகள் வீடு திரும்பவேண்டி ஒலிக்கும்.

மற்றை நாள் ருக்மிணிப் பிராட்டி வேண்டு கோளை ஏற்று அவளை மணம் முடிக்க வந்திருப்பதைக் குறிக்க *'பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலி'*யும் (நாச்சியார்.திரு 9-9) அன்று.

பின்னர் பாரதப்போர் துவங்கும் முன் பாண்டவர்க்கு அபயமளித்து உற்சாகம் ஊட்டவும் துரியோதனாதியர் தொடை நடுங்கி வெல வெலத்துப் போம்படி ஜயகோஷம் செய்து முழங்கும் சங்கம் (ஸ்ரீகீதை அத்.1 ச்லோ 15) போன்றதன்று.

இஃது இந்த திவ்ய தம்பதிகளின் அடியார்கள் முழங்குவது; அர்ச்சை யில் அவன் ரக்ஷணத் திலீடுபாடுடைய கைங்கர்யபரர்களை அத்தாணிச் சேவகத்திற்கு அழைக்கும் சங்கம்.

ஆதலின் அமைதியான விடியற்காலையில் பேரரவமாக முழங்கும்.

இந்த அடையாளம் கூறி '*மலரணை பள்ளி கொள்ளும் அன்ன*'மாம் (திருப்பள்ளி.2) ஆயர்பாடி பிராட்டியைத் துயிலுணர்த்து கிறாள். அதனைச் செவி மடுத்தும் பிராட்டி அசைவின்றி யிருக்க மற்றும் ஒரு செய்தி கூறி எழுப்ப முற்படுகிறாள்.

'வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து' இராமாவதாரத்தில் காடுமே டெல்லாம் அலைந்து திரிந்து பட்ட துன்பம் தீரவும், பூதேவி வேண்டின படி பூபாரம் போக்க பாரதப்போர் மூளும் நாள் வரை அமைதி யாகத் துயில ஆய்ப்பாடி வந்து தோன்ற, இங்கும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும் பருவமடையாத நிலையில் நம்பி மூத்த பிரான் பாதுகாப்பில் '*ஓர்க் கீழ்க் கன்றாய்*' (நாச்.திரு 14-1) வளர்ந்து வருமளவில்,

அன்றொருநாள் அன்னையின் உருவில் நச்சுப் பாலூட்ட வந்த பூதனையை மாய்த்த போது '*ஸர்வ கந்த*' னானவனுடைய திருமேனி தீண்டப்பெறும் பேறு பெற்றதால் பூதனையின் உயிரற்ற உடலும் மணம் வீசியதாம். அத்தகைய க்ருக்ஷ்ண ஸம்ஸ்லேஷம் பெற்று மணம் பெற சற்றும் ஆசை யில்லாமல் உறங்கிக் கிடக்க லாமோ?

மற்றொரு நாள் யசோதைப் பிராட்டி யமுனைக்கரையில் நீராடச் செல்லும் முன்பு காவலுக்கு வைத்த வண்டிச் சக்கரத்தில் கள்ளத் தனமாக உருமாறி வந்த ஓர் அசுரனைத் தாய்ப்பால் வேண்டி அழுவது போல் கால்களை உதைத்து அவ்வசுரனை வதம் செய்த அவன் திருக் கால்களை உன் தாமரைக் கைகள் கொண்டு ஒத்தடம் கொடுக்க வேண்டாமோ என்கிறார்கள்.

இங்ஙனம் ஓர் அசுரப் பெண்ணாலும் ஆணாலும் ஏற்படக்கூடிய ஆபத்தினின்றும் அவனைக் காக்க அவன் உறையும் இடத்தை எல்லாரும் அறியச்செய்யும் மங்கள தீப ரேகையான உன்னை ஒளிக் காட்டாதே மறைத்தாயோ.

அவனே இன்று அர்ச்சக பராதீனனாக அர்ச்சையில் எழுந்தருளி யிருக்கையாலே அவனுக்கு என் வருகிறதோ என்று வயிறு பிடித் திருக்கும் எங்களுடன் பல்லாண்டு பாட '*அகலகில்லேன் இறையும்*' (திருவாய் 6-10-10) என் றிருக்கும் மஹிஷியான நீயே தலைமை ஏற்று எம்மை வழி நடத்தத் துயிலெழுந்து வர வேண்டும் என்று வேண்டுகிறாள்.

நாம் துயிலுணர வேண்டுமோ! தங்களின் ஸத்தா ஹேதுவான அவன் ரக்ஷணத்திற் கென்றே சேஷத்வ பாரதந்த்ரயத்தில் தலை சிறந்த வைகுந்தத்தமரரும் முநிவரும் ஊரில் பசுநிரைக் கொட்டில்களி லெல்லாம் படுகாடு கிடக்கிறார்களே என்று பிராட்டி திருவுள்ளமாக, பிள்ளாய்! அவர் களும் துயிலெழுநதனர் காண். அவர்கள் பாடும் பல்லாண்டொலியானது விடியற்காலை நேரத்தில் யோகிகள் எல்லாரும் துயிலுணர்ந்தவாறே ஹரி: ஹரி: என்று ஏழு முறை உரக்க அனுஸந்திக்கும் பேரரவம்போல் எங்கள் காதுகளில் உட்புகுந்து உள்ளம் குளிரச்செய்து நாங்கள் எழுந்து வந்துள்ளோம்.

'ஆயினும் அஞ்ஞையான பின் யான் என் செய்வது?' என்று அப்பெண்பிள்ளை திருவுள்ளமாக, எப்படி மேய்ச்சலுக்குப் போய் ஊர் திரும்பும் பசு ஊர் நெருங்கியது கண்டு தன் கன்றினை நினைந்து கனைக்க உடன் வரும் குருட்டு பசுவும் கனைக்குமோ அதுபோல் நீயும் பகவத் விஷயத்தில் புதியவளாகையாலே சப்தாதி விஷயங்களில் தமோகுணம் மிக்கவராய் இருத்தலன்றி ஆத்ம விஷயத்திலும் ஈச்வர விஷயத்திலும் ஸங்கோச மில்லாத ஜ்ஞான வைபவத்தை உடைய துஞ்சா முனிவரைப் பின்பற்றி அவன் திருநாமங்களப் பாடி பறை கொள்ள எழுந்திராய் என்று வேண்டு கிறார்கள்.

ஶ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி அருளிச் செய்தவண்ணம் 'பிள்ளாய்' என்று பொங்கும் பரிவுடைய பெரியாழ்வாரைத் துயிலுணர்த்தினார்களாகவும் கருதலாம்.

## *2.* ***ஏழாம் பாட்டு: 'கீசுகீசென்று'***
## திருவடமதுரை திவ்யதேசப் பிராட்டி

ஏழாம் பாட்டில் கோவர்த்தனமும் விருந்தாவனமும் உள்ளடங்கிய திருவடமதுரை திவ்யதேசப் பிராட்டியைத் துயிலுணர்த்துகிறாள்.

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமத்தில் 'ஹரி:' என்கிற திருநாமத்தை 656வது (ஸ்ரீ பட்டர் வ்யாக்யானத்தில்) திருநாமமாகக் காணலாம். கோவர்த்தனமலை மேல் எம்பெருமான் 'ஹரி' என்கிற திருநாமத்துடன் சேவை சாதிக்கிறானாம்.

கீழ்ப்பாசுரத்தில் முனிவர்களும் யோகிகளும் ஹரி: ஹரி: என்று அனுஸந்தித்த அளவில் திருவாய்ப்பாடிக்கு அருகில் உள்ள திவ்யதேச மான கோவர்த்தனத்தில் கோயில் கொண்டுள்ள கோவர்த்தனேசன் நெஞ்சில் நிழலாட, அவனது பிராட்டியைத் துயிலெழுப்ப, அவளும் துயிலுணர்ந்து இவரகள் திரளில் சேர, அடுத்து அருகே உள்ள பிரதான திவ்ய தேசமான திருவடமதுரை பிராட்டியைத் துயிலெழுப்ப முற்படுகின்றனர்

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் 654 ஆவது திருநாமமான '*கேசவ* திருநாம வ்யாக்யனத்தில் வடமதுரையில் 'கேசவன்' என்கிற திருப்பெயருடன் எம்பெருமான் சேவை சாதிக்கிறான் என்று காட்டப்படுகிறது. ஆதலின் ஏழாம் பாட்டில் 'நாயகப் பெண் பிள்ளாய்' என்றும், 'தேசமுடையாய்' என்றும் இந்த திவ்யதேசப் பிராட்டியைத் துயிலுணர்த்துவதாகக் கருதலாம்.

ஆயினும் பிராட்டியை 'நாயகப் பெண் பிள்ளை'யாகக் கொண்டாடும் முன் 'பேய்ப்பெண்ணே' என்று கூறுவதேன்? எனில் சொல்லுவோம்.

பேய்த் தனம் என்பது அந்யதாஜஞானத்தைக் குறிப்பது என்பது அழகியமணவாளப் பெருமாள் நாயனார் திருவுள்ளம். பகவத் ஸம்ஸ்லேஷம் பாகவத ஸம்ஸ்லேஷம் வரை என்றறிந்து

ஆறியிருப்பதே என்ன அறிவு? என்று கோபித்துப் பேசுகிற வார்த்தை 'பேய்ப்பெண்ணே' ஆகும். அந்யதாஜஞானம் என்பது வேறாக அறிவது ஆகும். அறிவின்மை அல்லது பேதைமை (யாதும் அறியாமை)யைக் காட்டும், மேலையார் செய்யாதன செய்யோம் என்று ஸங்கல்பத்திருக்கச் செய்தே

'*நெடுமா லழகு தன்னில் நீள்குணத்தி லீடுபடுமா நிலையுடை பத்தர்க்கு*' (திருவாய் நூற் 80) அடிமையாக வாழ்தல் இன்பம் என்று ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணமாக ஆழ்வார் அருளிச் செய்த வைதீக ஸித்தாந்தத்தை '*ஓதிஉணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும்*' (குறள் 834) அதனைத்தான் காற்கடை கொள்ளும் பேதையே என்றவாறு.

அறிவில் குறையுடை ஆனைச்சாத்தன் பறவைகளும் ‘கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்’ என்கிறபடியே க்ருஷ்ண க்ருஷ்ண என்று கம்சனுக்கு பயந்து சொல்லமுடியாமல் தமக்குள் கெஞ்சலாக கீச்சு கீச்சு என்று கலந்து பேசக்கேட்டும் கண்ணுறங்கும் பேதையே என்றுமாம்.

மற்றும் பேதைப்பெண்ணே என்று கூறினால் பாடலின் சீர் தட்டு மாதலின் சுருக்கிப் பேய்ப் பெண்ணே! என்கிறாள் எனலாம். க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தைப் பெற தங்களின் பாரிப்பு அறியாமல் படுத்துக் கிடக்கிறாளே என்ற வேதனையை வெளியிட்டவாறே 'பேய்ப்பெண்ணே' என்கிறார்கள்.

தாழவோ பழித்தோ சொன்னார்களன்று. அங்ஙனம் தாழப் பழித்துச் சொன்னோமே யாகிலும் தன்பால் அன்பு மிக்கவர் தன்னைத் தாழப் பழித்துச்சொன்னவன்று அது பொறுக்காமல் முகம் காட்டும் அவன் போல் அவனது பிராட்டியும் வந்து முகம் காட்டக் கூடும் என்று எண்ணி உரைத்தார்கள் போலும்.

திருவிருத்தம் 62 ஆம் பாசுர வியாக்கியானத் தில் ஸ்ரீ எம்பார் அருளிச்செய்த வார்த்தை யின் உடபொருள் காண்க. முகில்வண்ணனே என்று ஒருமையில் கூறாமல்

முகில்வண்ணரே என்று பன்மையில் கூறினால் உள்ளுவார் உள்ளிற் றெல்லாம் உடனிருந்து அறியுமவன் அன்பரானவர் அவ்வாறு கூறியதன் உள்நோக்கம் அறிந்து மேலோட்டமாக மதிப் புடன் கூறுவதாக எண்ணி என்னை நிந்திப்பதேன்? என்று மல்லுகட்டிக் கொண்டு வந்து முகம் காட்டுவானாம். தன் ஸ்வரூபத்தாலே தான் நாடும் பேற்றைப் பெறவிருக்கை யன்றிக்கே தன் ஸ்வரூபத்தை யழித்தாகிலும் அதனைப் பெற வார்த்தையாடுகிறார்கள்.

திருவாய்ப்பாடியினின்றும் விருந்தாவனத் திற்குக் குடி பெயர்ந்த போதும் ஆயர்பெண்டிர் கண்ணன் மிகவும் விரும்பித் திருடியாவது உண்ணும் அன்று கடைந்த வெண்ணெய் எடுக்க, முப்போதும் தயிர் கடையத் தவறுவ தில்லை

அதே போல் அடியார்கள் க்லேசம் நீக்கவும் தன்னைத் தம் கண்களாரளவும் காண வேண்டும் என்ற அவர்கள் விடாய் தீர்க்கவும் தவறாத வண்ணம் கண்ணுக்குத் தோற்றாதே ரக்ஷிக்கும் ஸர்வேச்வரன் நாராயணன். ஆச்ரித வாத்ஸல்ய மூர்த்தியாய் ஹரி கேசவ திருநாமத் தோடே இங்கு வடமதுரை திவ்யதேசத்தில் அர்ச்சா மூர்த்தியாகக் கோவில் கொண்டிருக்கின்றான்.

அவனது திவ்யமஹிஷியாய் எம் காரியத்தைத் தலைக்கட்டித் தரத் துணையாக வர வேண்டும் என்று தேசமுடையாய் என்று போற்றிப் பிரார்த்திக்கிறார்கள்.

'தேசமுடையாய்' - ஒளி பொருந்தியவளே

*‘வக்ஷ:பீடிம் மதுவிஜயிநோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா’* (மதுவெனும் அசுரனை வெற்றி கொண்ட எம்பெருமானுடைய திருமார்பாகிய பீடத்தை அழகுறச் செய்பவள்) என்று ஸ்வாமி வேதாந்தவாசிரியரின் ஸ்ரீஸ்துதி.

'ஓஜஸ்தேஜோ த்யுதிதர:" (ஸஹ. நா. 276)

ஓஜ; பலம்
தேஜஸ் - தேசு பிறரை வெல்லும் பராபிபவந ஸாமர்த்யம்.
த்யுதி - ப்ரகாசம், ஒளி (ஔஜ்வல்யம்)
இவற்றை எல்லாம் உடைய அவனுக்கு ஒளிக்கற்றையாய்த் திகழ்பவளே என்று குண கீர்த்தனம் செய்கிறார்கள்.

அன்றிக்கே 'ப்ரகாசாத்மா' - (ஸஹ. நா.277) ஒளிமணிவண்ணன் 'தேஜோவ்ருஷ:' - (ஸஹ. நா. 763) தேஜஸ்ஸை வர்ஷிப்பவன் என்கிறபடியே அவனைக் கண்குளிரக் காண எங்களுக்குப் பூரண ஒளிவிளக்காக இருப்பவளே என்று கொண்டாடுகிறார்கள்.

ஆழ்வானும் '*யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தே அகிலம்*' (ஸ்ரீஸ்தவம் 1) என்று அருளிச்செய்தபடி, 'ஆதிதேவ:' (ஸஹ.நா 491) எனும் திருநாமமுடைய எம்பெருமான் தேவர்களைப் படைத்து அவர்களை வெவ்வேறு பணிகளைச் செய்ய நியமித்து அவர்களை அடக்கி ஆளும் தேஜஸ்ஸை உடையவன். அந்த ஆதிதேவன் உன் அன்பின் வழி நிற்பவனாதலின் உன் நியமனத்தைச் சிரமேற்கொண்டு தன் அடியார் வேண்டுவனவற்றைத் தலைக்கட்டித் தர வல்லவன். ஆதலின் அவனிலும் மிக்க தேஜஸ்ஸை உடைய நீ எழுந்தருளி நாம் வேண்டுவனவற்றைப் பெற்றுத் தரவேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்கள்.

இவ்வளவும் இவர்கள் சொல்வதைக் கேட்டிருந்தும் எழுந்து வராமையால் '*தேசமுடையாய்' என்று தான் அரசியாகத் திகழும் வடமதுரை நாட்டின் செல்வ வளம் இவளைக் கண்ணுறங்கச் செய்வதாக எண்ணி அதனால் வரும் குற்றம் சுட்டிக் காட்டுகிறார் களாகவுமாம்.

*'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற் குறுப்பு* (*குறள்* 737)

என்கிறபடியே யமுனை ஆறும் கோவர்த்தன மலையும் அரணும் அவயவமாய் அமைந்துள்ள வடமதுரை நாட்டின் அரசியாகத் திகழ்பவளே!

'*ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே*
*வேந்தமை வில்லாத நாடு*' (குறள் 740)

என்றும் சொல்கிறபடியே உன்றன் குடிமக்களான நாங்கள் உன்பால் அன்போடு நாயகப்பெண்பிள்ளாய் என்று கொண்டாடுவதைக் கேட்டு நீயும் எங்களிடத்து அருள்கூர்ந்து எழுந்து வந்து வாயிற் கதவைத் திறக்க வேண்டும். அவ்வாறு செய்யாது போனால் நாட்டின்கண் யாவும் நிறைந்திருத்தலால் ஏதும் பய னில்லை எனும் குற்றம் வாராமல் பார்த்தருள் என்கிறார்கள்.

'*இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்*
*கெடுப்பா ரிலானும் கெடும்*'. *(குறள் 448)*

என்பதனால் முதலில் பேய்ப்பெண்ணே என்றுரைத்ததோடு இப்போது வஞ்சப் புகழ்ச்சியாக தேசமுடையாய் என்றிடித் துரைப்பது என் பொருட்டு எனின்

'*ஏதங்கொண்டு ஊதியம் போக விடல்*' *(குறள் 831)*

என்கிற வள்ளுவன் வாக்கின்படி தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கை விடுதலாகிற பேதைமை எனும் 'அள'ற்றின்கண் (குறள் 835) வீழாமல் காப்பதற்காம்.

'*அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ*
*தஞ்ச லறிவார் தொழில்*' *(குறள்* 428)

என்றதனை நோக்கி இவர்கள் கூற்றின் உண்மையை உணர்ந்த திருவடமதுரை திவ்யதேசப் பிராட்டி துயிலெழுகின்றாள்.

## *3. எட்டாம் பாட்டு: 'கீழ்வானம்'*
## திருத்துவாரகை திவ்யதேசப் பிராட்டி

எட்டாம் பாட்டில் துயிலெழுப்பப்படும் பெண்பிள்ளை திருத் துவாரகை திவ்யதேசத்துப் பிராட்டி எவ்வாறு ஒப்பாகிறாள் என்று பார்க்க வேண்டும்.

கண்ணபிரான் ஓரிரவில் வடமதுரையில் தோன்றி, அற்றை இரவிலேயே கோகுலத்தில் ஒளிந்து வளர்ந்து, பின்னர் விருந்தா வனத்தில் குடி புகுந்து, கம்ச வதத்தின் பின் வடமதுரையில் மீண்டும் வாழ்ந்து வருகை யில், கம்ச வதத்திற்குப் பழி வாங்கும் பொருட்டு படையெடுத்து வந்த ஜராஸந்தன் பதினேழு முறை தோற்றோடுகிறான்.

மீண்டும் பதினெட்டாம் முறை காலயவனன் துணை கொண்டு ஜராஸந்தன் வருவதை அறிந்து வடமதுரையை விட்டு குடிமக்களுடன் கடலரசன் அனுமதி பெற்று மேலைக் கடலருகே துவாரகா பட்டினத்தை நிறுவிக் குடியேறினான்.

இங்குதான் ருக்மணி ஸத்யபாமா ஆகியோரைக் கடிமணம் கொள்கிறான். மற்றும் எண்மரையும், நரகாசுர வதத்திற்குப் பின் பதினா றாயிரவரையும் மணம் புரிந்து கொள்கிறான்.

ஆதலின் கண்ணன் பிறப்பு வளர்ப்பின் வரிசையில் அடுத்த திவ்யதேசமாக துவாரகை இடம் பெறுகிறது. இந்த திவ்யதேசப் பிராட்டியான ருக்மிணி தேவியை 'கோதுகலமுடைய பாவாய்' என்று ஸ்ரீ ஆண்டாள் அழைக்கிறாள்.

அன்று ருக்மணிப் பிராட்டியின் சகோதரன் அவளை சிசுபாலனுக்கு திருமணம செய்து தர ஏற்பாடு செய்வதை அறிந்த ருக்மிணிப் பிராட்டி கண்ணனை மணக்கவே தான் விரும்புவதை ஓர் அந்தணரிடம் கண்ணனுக்குக் கடிதம் அனுப்புகிறாள். கண்ணன் அதைப் பெற்றதுமே பதில் கடிதம் எழுதி அனுப்பவும் தாமதிக்காமல் மிக்க குதூகலத்துடன் தேரேறிச் சென்று

'*திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்து*' (*நாச். திரு.* 11-9) துவாரகைக்கு அழைத்து வந்து மணம் புரிந்துகொண்டான்.

இங்ஙனம் ருக்மருக்மிணிப் பிராட்டி என்ற பெயர் செவிப்பட்டாலே கண்ணன் கொள்ளும் குதூகலத்தை அளவிட முடியாதாதலின் கோதுகலமுடைய பாவாய் என்கிறாள்.

‘கோதுகலமுடைய ….. …..தேவாதிதேவன்’

‘தேவ: ஸ்ரீகர்ப்ப:’ (ஸஹ. நா 376, 377) ஜீவர்களை மாயை என்னும் கயிற்றால் கட்டி விளையாடுபவர். அகலகில்லேன் என்றிருக்கும் பிராட்டியைத் தன் இன்புறும் விளையாட்டிலும் பிரியாமலிருந்து கொண்டு கர்ப்பத்தைப்போல் காப்பவன். மன்பல் லுயிர்களும் அவனது பேரருளுக் கிலக்காக விருப்பம் இன்றிக்கே மதிமயங்கிக் கேட்டினைச் சூழ்த்துக் கொண்டிருப்பது கண்டு பிராட்டி முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்ய அதுவே கோல் விழுக்காட்டாலே அவனுக்கு லீலா ரசமாயிற்றாம்.

'*ச்ரத்தயா தேவோ தேவத்வமச்னுதே*' என்கிறபடியே சிறு தேவனான எம்பெருமான் 'ச்ரத்தா' சப்த வாச்யையான உன்னுடனான தொடர்பினாலேயே தேவாதிதேவனா யிருக்கும் தன்மையை அடை கிறான். ஆதலின் நீ எங்களுடன் சேர்ந்தாலன்றோ எங்கள் மனோரதம் கார்யகரமாவது என்று கூறி அழைக்கிறாள்.

ஆனால் இப்பெண்பிள்ளையோ எனில், நாம் செல்ல வேண்டுமோ? 'ஸ்வம்' (ஸொத்து) இருக்கும் இடம் தேடி ஸ்வாமி வாரானோ என்று ஆராய்ந்து கொண்டிருப்பதை ஸ்ரீ ஆண்டாள் உணர்ந்து

'நாம் சென்று சேவித்தால் ….ஆஆ வென்று அருளும்' என்று கூறுகிறாள்.

எங்ஙனே எனில் இவர்கள் நம்மை நாடி வரும்வரை வாளா இருந்து விட்டோமே; ‘*ஸர்வேச்வர:*’ (ஸஹ. நா 97) -தன்னை பற்றியவரைத் தானே சென்றடைபவன் என்று ஸ்ரீ பீஷ்மர் சூட்டிய திருநாமம் பொய்த்து விடுமோ என்று அவன் ஆராய்ந்து 'ஐயகோ! தப்பச்செய்தோம்' என்று விரைந்தருள் புரிவான்

அன்றிக்கே தேவாதிதேவனைச் சென்று நாம் சேவித்தால் என் செய்வான்? எனில, '*ஓதி நாமம் குளித்து உச்சி தன்னால் நாளும் ஒளி மாமலர்ப் பாதம் பணிவோம்*' என்றாரிறே பரகால நாயகியும் (திருமொழி 9-3-9). 'அன்பராய்ப் போதும்' - ஆஆவென்று அருளும். அவன் என்னதான் செய்தாலும் அவன் பக்தியால் அடையப்படுபவன் என்ற வார்த்தைகளை மாற்ற முடியாதன்றோ? உபாயம் எனக்கருதி அவன் திருவடிகளில் வணங்கினால் அவன் மிறுக்கு பண்ணித் தராவிடினும் நாம் பண்ணும் பக்தி அவனைத் தரும்படி பண்ணி வைக்கும். '*மம ப்ரிய:*' என்று அவன் நம்மிடம் பக்தி கொண்டு நம்மை அடைய வேண்டும் என்றிருப்பதனை விடுத்து, இனி நாம் பக்தராய் அவன் இருப்பிடம் நோக்கிப் போவோம். பேறு நமக்குக் கிட்ட வேண்டுமென்றால் அதற்குரிய வழிகளில் ஈடுபடுவதும் நம் செயலாக இருக்க வேண்டும் அன்றோ? அவனை ஒரே இடத்தில் நிலையாக இருக்கச் செய்ய வேண்டுமோ? அவன் நம்மை நோக்கி எதிரே வரும்படி நாம் அவனை நோக்கிச் செல்வோம். நாம் செய்யும் செயல்கள் நமக்கியல்பானாவை என்றிருந்தா லன்றோ அவன் பொறுத்திருப்பான். அவனை அடையப் பக்தியை உபாயமாகப் பற்றினால் அவனுக்கு நிலை கொள்ளாதன்றோ? ஆ! ஆ! தப்பச்செய்தோம் என்று உடனே அருள் செய்ய முற்படுவான் என்கிறாள்.

அன்று உன் பரிகாரமான எம் பெரிய தகப்பனார் (நம்மாழ்வார்) தாய்ப் பேச்சாக '*முறையோ*' (திரு விருத் 62) என்று கேட்ட கேள்விக்கு உரு வெளிப்பாடாய் குளிர நோக்கப் பெற்றார் அன்றோ? அங்ஙனாகில் மஹிஷியே நேரில் வந்தால் கேட்க வேண்டுமோ?

## *4.* **ஒன்பதாம் பாட்டு: "தூமணி மாடம்"**
## **திருப்பாற்கடல் திவ்யதேசப் பிராட்டி**

ஒன்பதாம் பாட்டில் திருப்பாற்கடல் திவ்யதேச பிராட்டியான கடல் மகள் நாச்சியாரைத் துயிலெழுப்புவதாகக் கருதலாம். வடமேற்கே அரபிக் கடலோரம் உள்ள வண்துவராபதி போல் தென்கிழக்கே வங்கக் கடலோரம் தக்ஷிண துவராபதியாக இராஜமன்னார்குடி எனும் செண்பகாரண்ய க்ஷேத்ரம் அமைந்துள்ளது. இங்குள்ள ஸன்னிதி மாடவீதிகள் கோபால ஸமுத்திரம் என்றே வழங்கப்படுகிறது. மற்றும் இங்கு திருப்பாற்கடல் வீதி என்று ஒரு வீதியும் திருப்பாற்கடல் எனும் புஷ்கரணியும் உள்ளன. ஆதலின் துவாரகாவை அடுத்துத் திருப்பாற்கடல் திவ்யதேசப் பிராட்டியை யன்றோ துயிலெழுப்ப வேண்டும்.

எம்பெருமான் ஆமையாகி ஆழ்கடல் கடைந்த அன்று கடலரசனிடமிருந்து தோன்றிய கடல் மகள் நாச்சியார் மற்றெல்லாரும் கை தொழ எம்பெருமான் திருமார்பைச் சென்று சேர்ந்தாள். கடலரசன் மனைவிமாரான ஸப்த நதிகளும் பிராட்டியின் தாயார் முறையாயினர். அது போன்று ஸ்ரீ ஆண்டாளும் அழகிய மணவாளப் பெருமாளான அரங்கன் அணிமார்பைச் சேர்ந்ததால் அவளைப் பெற்ற பெரியாழ்வாரும் கடலரசன் போல் எம்பெருமானுக்கு மாமனார் ஆகிறார். ஆதலால் தன் மணவாளனின் மாமனார் கடலரசனைத் தனக்கு 'மாமான்' என்ற உறவு முறையிலும் அவனது மனைவியரை 'மாமீர்' என்ற முறையிலும் கடல் மகள் நாச்சியாரை 'மாமான் மகளே' என்றும் விளிக்கின்றாள்.

இந்தப் பாற்கடலில் "*இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி இனத் துத்தி அணிபணமாயிரங்களார்ந்த அரவரசப் பெருஞ்சோதி*"*யே (பெருமாள் திரு. 1-1)* தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கேற்றி வைத்தது போல் ப்ரகாசமாக உள்ளது. ஆங்குறையும் பிராட்டி அங்கு '*வானவர்கள் அந்தூபம் தராநிற்க*' *(திருவிருத்தம்*

*21)* அதினின்றும் கமழும் நறுமண மயக்கில் கண்ணுறங்கிக் கிடக்கிறாள்.

‘*மாதவ* (ஸஹ. நா 169, 741) என்ற பதத்தில் 'மா' மௌனத்தைக் குறிக்கும்.
'த' த்யானத்தைக் குறிக்கும்.
'வ' யோகத்தைக் குறிக்கும்.
ஆக ஊமை போல் வாய் மூடி மௌனமா யிருந்தும், செவிடு போல் த்யான நிலையில் நின்றும், அனந்தல் (தூக்கம்) போல் 'ஶ்ரீகர' (ஸஹ.நா. 618) என்கிற திருநாமத்தை யொட்டி அவன் போல் பாற்கடல் யோக நித்திரை கொண்டுள்ளாள் போலும்.

ஶ்ரீவைகுந்தத்தினின்று திருமதுரைக்கு வரும் வழியில் கண்ணன் திருப்பாற்கடலில் வ்யூஹ வாஸுதேவக் கோலத்துடன் சேவை சாதிக்க, கண்குளிர காணப்பெற்று அங்கே அவனுக்கு ‘*ஸுமுக*:’ (ஸஹ.நா. 457) (மலர்ந்த திருமுக முடையவன்), '*மனோஹர*: (ஸஹ.நா. 462) (மனதைக் கவர்பவன்), ‘*ஸ்வாபன:*’ (ஸஹ.நா. 466) (வசீகரித்துத் தூங்க வைப்பவன்) ஆகிய திருநாமங்கள் வழங்கப்படுகையால் அவனால் ஏமப் பெருந்துயிலில் ஆழ்த்தப்பட்டாளா? என்று ஆச்சரியமாக இருக்கிறது என்கிறாள்.

இவளைத் துயிலெழுப்புவது எவ்வாறு என்று அன்னைமார் ஆராய்ந்து கொண் டிருக்கக் கண்டு எந்த அம்மான் பொடியால் கண்ணுறங்கப் பெற்றாளோ அது கொண்டே உறக்கம் கலைந்து எங்களுடன் சேர வேண்டும் ஆதலின் மாமீர் அவனது கல்யாண குணங்களைப் பேசும் ஶ்ரீஸஹஸ்ர நாமமும் நவின்று எழுப்புமாறு பிரார்த்திக்கிறார்கள்.

## 5. பத்தாம் பாட்டு: "நோற்றுச் சுவர்க்கம்" திருக்கண்ணபுர திவ்யதேசப் பிராட்டி

முதல் முன்னமே தெரிவித்தபடி பத்தாம் பாட்டில் திருக்கண்ணபுர நாயகியை 'அம்மனாய்' என்றும் 'அருங்கலமே' என்றும் விளித்துத் துயிலெழுப்புகிறாள். திருப்பாற்கடல் நாச்சியாரைத் துயிலுணர்த்தியபின் திருப்பரமபத நாயகியைத் துயிலெழுப்பாமல் திருக்கண்ணபுர நாயகியைத் துயிலெழுப்புவானேன் என்று விசாரிப்போம்.

திருப்பாற்கடல் நாச்சியார் துயிலெழுந்ததும் ஸ்ரீ ஆண்டாளிடம் செய்தி ஒன்று தெரிவிக்கிறாள். அதாவது வங்கமலி தடங்கடலின் அருகில் மேற்கில் 'பூலோக வைகுண்டம்' என்றழைக்கப்படும் க்ருஷ்ணாரண்ய க்ஷேத்ரம் உள்ளது. இங்குள்ள திருக்கோயிலில் கருவறையில் மூல மூர்த்தி நீலமேகப் பெருமாளாக சேவை சாதிக்கிறார். அவரது வலது பக்கம் தனிக்கோயில் நாச்சியாராக மூல மூர்த்தி க்ருஷ்ணபுரநாயகி எழுந்தருளியிருக்கிறார். இப்பெருமானே திருப்பாற்கடல் சமுத்திரராஜன் வேண்டுகோளுக்கிணங்க அவனது புதல்வன் சந்திரனுக்கு தக்ஷமுனிவனின் சாபத்தால் ஏற்பட்ட க்ஷயரோகத்தைப் போக்கியருளினான். இப்பெருமானின் பிராட்டியையும் நாம் உடன் அழைத்துச் சென்றால் நல்லது என்று யோசனை கூற, க்ருஷ்ணபுர நாயகி பால் ஸ்ரீ ஆண்டாளின் கவனம் திரும்புகிறது.

அந்த பிராட்டியோ பரமபதத்தேறிச் செய்யும் கைங்கர்யானுபவத்தை இங்கேயே கண்ணபுரத்தம்மானால் கைக்கொண்டு, நோன்பாவது கண்ணபுரத்தம்மானை உபாயமாக அறிவது என்ற எண்ணம் கொண்டு உறங்கிக் கிடக்கிறாள்.

அவளிடம் 'அம்மனாய்' நீ எங்கள் குழுவிற்குத் தலைமை ஏற்று அழகுபடுத்த வேண்டியவள் அன்றோ என்று அழைக்கிறாள்.

அவளோ ஆண்டாளின் இந்த செவிக்கினிய செஞ்சொல்லிலீடுபட்டும் நம்மை இவர்களின் அடிமையாகப் பார்க்காமல் நம்மைத் தங்கள் தலைவியாக ஏற்க விரும்பும் எண்ணத்திற்கு இசைந்தோமாவோம் என்று எழுந்திருந்து வாசல் கதவைத் திறக்காமலும் மறுமாற்றம் ஏதும் கூறாமலுமிருந்தாள்.

இது நிற்க. இந்த திவ்யதேசத்தின் கிழக்கில் உள்ள கடலில் கருடன் அமர்ந்து தவஞ்செய்த கருட பர்வதம் ஆழப் புதைந்துள்ளது. அந்த கருட பர்வதத்திற்குக் காட்சி தர வருடந்தோறும் மாசி மாதம் பௌர்ணமியன்று கடற்கரையிலிருக்கும் திருமலைராயன் பட்டினத்திற்கு உற்சவ மூர்த்தி சவுரிப்பெருமான் கருட வாகனத்தில் சவுரி முடியுடன் எழுந்தருள்கிறான். மற்றும் தலம், வனம், நதி, கடல், நகரம், தீர்த்தம், விமானம், ஆகிய ஸப்த புண்ணிய க்ஷேத்ரமாகவும் விளங்குகிறது.

தவிர ஸ்ரீரங்கம், திருவேங்கடம், ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை, சாளக்ராமம், புஷ்கரம், பத்ரிகாச்ரமம், நைமிசாரண்யம் ஆகிய எட்டு ஸ்தலங்களிலும் திருமந்திரத்தின் எட்டெழுத்துக்களின் ஒவ்வொரு எழுத்தின் வடிவத்தில் எம்பெருமான் எழுந்ததருளி இருக்க எட்டெழுத்துக்களின் முழு வடிவமாகத் திருக்கண்ணபுரத்தில் சேவை சாதிக்கிறான்.

ஆதலின் இத்தகைய நாற்றத்துழாய் முடி நாராயணனான புண்ணியனின் மஹிஷியான உன்னுடன் சேர்ந்து அவனைப் போற்ற எங்களுக்கும் கைங்கர்ய ஸித்தி உண்டாக எழுந்தருள வேண்டும்.

## 6. பதினோராம் பாட்டு: "கற்றுக் கறவை"
## திருவரங்கத் திவ்யதேசப் பிராட்டி

கீழ்ப் பத்தாம் பாட்டில் எம்பெருமானின் கீழை வீடான திருக்கண்ணபுரத்து நாயகி இவர்களுடன் சேர இனி 'கற்றுக் கறவை' என்று தொடங்கும் பதினோராம் பாட்டில் எம்பெருமானின் மேலை வீடான ஸ்ரீரங்க க்ஷேத்ரத்து நாச்சியாரான ஸ்ரீரங்கநாயகியை 'பொற்கொடி' என்றும், 'புனமயில்' என்றும், 'செல்வப் பெண்டாட்டி' என்றும் விளித்துத் துயிலெழுப்புகிறாள்.

யதுகுலத்தில் சூரர் பிரிவில் வந்த வஸுதேவ ன் பிள்ளையாக அவதரித்ததால் கண்ணனுக்கு சௌரி என்ற பெயர் ஏற்பட்டது. கீழ்ப் பத்தாம் பாட்டில் அந்த திருநாமம் அனுசந்திக்கப்பட்டது. அவன் எப்படிப்பட்ட சூரன் என்று இப்பாட்டில் அனுஸந்திக்கிறாள்.

'கற்றுக் கறவை கணங்கள் பல கறந்த ....கோவலன்' என்கிறாள்.
'*மஹாபல:*' (ஸஹ.நா. 174) என்கிற திருநாமம் சாற்றி பீஷ்மரும் முன்னமே
துதித்துக் கொண்டாடினார். அதற்கேற்ப வெண்ணெயுண்ணும் பொருட்டு கோவலனாய்க் கறவை மாடுகள் பலவற்றையும் தானொருவனாகவே கறக்கும் பேராற்றல் படைத்த திண்புயம் கொண்டவன்.

அது மட்டுமா? 'செற்றார் திறலழியச் ..... செய்யும் .... கோவலன்' என்கிறாள்.
அந்த வலிமை படைத்த தோள்களின் துணை கொண்டு '*மஹாத்ரித்ருத்*' (ஸஹ.நா. 182) என்று பீஷ்மர் கொண்டாடினபடி, அன்று மந்திர மலையைத் தம் முதுகில் சுமந்ததுபோல் மற்றைநாள் தன் சுண்டு விரலால் ஏழு நாள்கள் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துச் செறுக்கொண்டு கல் மழை பெய்வித்த இந்திரன் திறலழியச் செய்து 'கோவிந்த' பட்டாபிஷேகம் செய்யப் பெற்ற கோவலன்.

மற்றும், 'செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும் .... கோவலன்' என்கிறாள்.
கர தூஷணர்களுடன் போருக்கு வந்த பதினாயிரம் அரக்கரையும் இலக்குவன் துணையின்றித் தானொருவனே போரிட்டு வென்று சீதாபிராட்டியின் அணைப்பால் போரில் ஏற்பட்ட இரணத்துக்கு ஒத்தடம் கொடுக்கப் பெற்றவன். பின் பிறக்கவுள்ள இளங்கிளியான பரகால நாயகியும் '*பார்த்தன் செல்வத் தேரேறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை செருக்களத்துத் திறலழியச் செற்றான்*' (திருமொழி 2-10-8) என்றும், "*மன்னெல்லாம் முன்னவியச் சென்று வென்றிச் செருக்களத்துத் திற லழியச் செற்ற வேந்தன்*' (திருமொழி 6-6-8) என்றும் பாட்டினால் காட்டப்பெற இருப்பவன். இவர்களும் மேலே 'சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி' என்று பல்லாண்டு பாடவிருக்கிறார்கள்.

அத்தகைய தோள்களைக் கொழுகொம்பாகக் கொண்டு தழுவிப் படரும் '*லக்ஷ்மி கல்பலதா*' என்றும், '*லக்ஷ்மி கல்பவல்லீ*' என்றும் ஶ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் (பூர்வ 10) ஶ்ரீகுணரத்ந கோசத்திலும் (3) பேசப்படும் 'பொற்கொடி'யே என்று விளிக்கிறாள்.

எனினும் தாடகை வாலி ஆகியோரை அழித்ததையும், கர தூஷணரோடு போரிடுகையில் பின்னால் மூன்றடிச் சென்றதுவும், கால யவனனுக்குப் பயந்து புறமுதுகிட்டதையும், குற்றமாகக் கூறப்படுகிறதே எனில் இவ்வாறான சில செயல்கள் எதிரிகளுடைய தீமனம் கெடுக்கவும் அவர்களுக்கு மருவித் தொழும் மனம் கொடுக்கவுமாம் என்று சொல்ல வேண்டுமே அன்றிக் குற்றமாகாது.
அன்றிக்கே வாலிப பருவத்தில் செய்தவையே அன்றி மாடு மேய்க்கும் கோவலனாய்க் குற்றமொன்றில்லாதவன். '*சரப:*' என்ற 357 ஆவது திருநாமத்தின்படி வரம்பு மீறி நடப்பவர்களை அழிப்பவன். ஆதலின் வலியச் சென்று போரிடும் குற்றமும் நிராயுதபாணிகளைத் தாக்கும் குற்றமும் இல்லாதவன்.

'*தன்னையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தன்னையே யொக்க அருள்*' (திருமொழி 11-5-3) செய்யும் '*பழுதில் தொல்புகழ்ப் பாம்பணைப் பள்ளியான்*' (திருவாய். 9-3-9) அவன் ஆதலின், அவன் அடியவனாகிய இந்தக் கோவலனும் குற்றமொன்றில்லாத கோவலன். இவன் பாதுகாப்பில் கண்வளரும் பொற்கொடி இவள்.

'புற்றரவு புனமயில்' -
பிராட்டி அடக்க ஒடுக்கமாய் அமர்ந்த கோலத்தில் காட்சிதருவது புற்றிலுள்ள அரவை நினைவுபடுத்தும். ஆயினும் எம்பெருமானுக்குள்ள அகடிதகடனா சாமர்த்தியம் அதாவது சேராச் சேர்த்திப் பிராட்டிக்கும் இயல்பாக உள்ளதால் பார்க்க பாம்பையும் அதன் எதிரியான மயிலைப் போலவும் சேவை சாதிப்பவளே என்கிறாள்.

புனமயிலே' - 'சிகீ'யான அரங்கன் எனும் ஆண்மயில் 'அநுசிகீ' எனும் இப்புனமயிலை மகிழ்விக்கத் தோகை விரித்தாடுகின்றான். பெண்மயிலான தன்னை மகிழ்விக்க ஆண்மயிலான அரங்கன் தன்தோகை விரித்தாடச் செய்பவள். அவன் சிங்கம் போலவும் எருது போலவும் தன் நடை யழகைக் காட்டினால் உன்னைப் போல் அமர்ந்த நிலையில் அன்ன நடையைக் காட்ட இயலாது. அந்த நடையழகைக் காட்டியருளப் போதராய் என்று வேண்டுகிறாள்.

'எதற்கு' என்று பிராட்டி அறிய விரும்புகிறாள் போலும் என்று எண்ணி '*முகில் வண்ணன் பேர் பாட*' என்று கூறுகிறாள்.

'முகில் வண்ணன் பேர்' என்று வான் திகழும் சோலை முகில் வண்ண மதிலரங்கர் திருவடிமேல் எம் பிரபந்நஜந கூடஸ்தர் சொல்மாலையாக நோற்ற ஆயிரம் இன்தமிழ்ப்பா. அதனை இன்னிசை யோடு நாவினால் பாடி அவனும் நாமும் யின்பமெய்த என்கிறாள்.

திருவரங்கச் செல்வனைத் தன்திருக்கண் நோக்கினாலும் புருவ நெறிப்பினாலும் நியமிக்கும் திருவுடையவள். ஆதலின் 'செல்வப்பெண்டாட்டி' என்று விளிக்கிறாள்.

அன்றிக்கே செல்வநாரணனின் இணைபிரியா இன்துணையாகும் செல்வப்பெண்டாட்டி' என்று சொல்லவுமாம். திருவான உன்னுடன் இருப்பதாலன்றோ திருவாளன் இனிதாக திருக்கண்கள் வளர்கின்றான். ஆதலின் நீயன்றோ எங்கள் காரியத்தைத் தலைக்கட்டித் தர வேண்டும். தனியாகக் கிடந்துறங்கிப் பயனில்லை. ஆதலின் சிற்றாதே பேசாதே கிடக்காமல் எழுந்தருள பிரார்த்திக்கிறாள்.

அன்றிக்கே சுற்றத்துத் தோழிமார்-
ஆராமம் சூழ்ந்த அரங்கமாதலின் அவன் பகல் வேட்டையாகச் சென்று தங்கும் தோட்டங்கள் மற்றை திவ்யதேசங்கள். அவ்விடத்துப் பிராட்டிமார் சுற்றத்துத் தோழிமார்ஆயினர்.

அன்றிக்கே திருவாய்மொழி 7-2-8 ன் ஈடு வ்யாக்யானத்தில் '*என் திரு மகள்*' என்னுமிடத்தில் ஸ்வாமி நம்பிள்ளை அருளிச் செய்துள்ளமைபோல் சாக்ஷாத் லக்ஷ்மியொடு ஒக்கச் சொல்லலாம்படியான நம்மாழ்வார் தலைமையிலான தம் தந்தைமார் பதின்மரையும் சொல்லிற்றா ராகவுமாம். '*காவியங்கண்ணி எண்ணில் கடிமாமாலர்ப் பாவையொப்பாள்*' (திருமொழி 3-7-9) என்றன்றோ பரகால நாயகியின் தாய்ப்பாசுரம்.

## *7.* பன்னிரண்டாம் பாட்டு: *'கனைத்திளம்'*
## திருவேங்கட திவ்யதேசப் பிராட்டி

பன்னிரண்டாம் பாட்டில் திருவேங்கடவன் திருமார்பினின்றும் இறையும் அகலகில்லேன் என்றுறையும் பத்மாவதித் தாயாரைத் துயிலெழுப்புகிறாள்.

கீழை மற்றும் மேலை வீட்டில் எழுந்தருளி இருக்கும் பிராட்டிமார் துயிலுணர ஸ்ரீ ஆண்டாளின் கவனம் வடக்கில் திரும்புகிறது. அந்த பக்கத்திலிருந்த திருவேங்கடவனே கீழை வீட்டில் திருக்கண்ணபுரத் தெம்பெருமானாகவும் மற்றும் மேலை வீட்டில் அரங்கத்தரவினணை யானாகவும் எழுந்ததருளி இருப்பினும், குன்றாத வைகுந்த வாழ்வை இகழ்ந்து பூமகள் நாச்சியார் தாமே கோதை நாச்சியார் எனும் திருநாமத்துடன் பெரியாழ்வார் பெண்பிள்ளையாக அவதரிக்க இருப்பதை அறிந்து, அவள் வரவை எதிர்பார்த்து வேங்கட மலையில் கோயில் கொண்டு, 'முகிலிடை மின்'னே (மூன்றாம். திரு 55) போல் திகழ்கின்ற திருமார்பில் அகலகில்லேன் இறையும் என்றிருக்கும் பிராட்டியுடன் நிற்கின்றான். ஆங்ஙனம் அங்கு கோயில் கொண்டுள்ள பத்மாவதித் தாயாரைத் துயிலெழுப்புகிறாள்.

'பனித்தலை வீழ நின் வாசற்கடை பற்றி', '*குளிரருவி வேங்கடம்*' என்றும், '*பனிவரையினுச்சி* என்றும் சொல்லப்படும் க்ஷேத்ரமாதலின் மார்கழி முன் பனி தலை மீது விழுகிறது. அதாவது பகவத் குணானுபவம் பெறும் மநோரதத்துடன் புறப்பட்டோம். நடுவில் பாகவத குணானுபவம் பண்ணா நிற்கின்றோம்.

"நற்செல்வன்"
'*ஸர்வயோக விநிஸ்ருத:*' (*ஸஹ.நா 104*) என்று பீஷ்ம பிதாமகரால் போற்றப்படு கிறவன். எல்லா உபாயங்களாலும் அடையப்படுபவன். சாஸ்திரங்களில் சொல்லப்பட்டதல்லாது தன் புத்தியில் தோற்றியதோர் உபாயத்தால் அடையக் கூடியவன்.

ஒழிவில் காலமெல்லாம் நிழல்போல் கண்ணனை விட்டுப் பிரியாமல் மனம் மெய் மொழிகளால் தொண்டாற்றும் ஏந்து பெருஞ்செல்வம் படைத்த நற்செல்வன் இவன்.

'*போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்*' வண்ணம் '*வேங்கடத்துறைவார்க்கு நம என்னலாம் கடமை அது சுமந்தார்*' (*திருவாய். 3-3-6*) ஆதலின், மற்றைய விஷயங்களில் விரக்தராய்க் கைங்கர்ய ருசியுடையராய்த் தங்கள் சொரூபத்தைச் சேர்ந்த கைங்கரியத்தையே செய்பவன்.

கீழ்ப்பாட்டில் மாற்றாதே பால் சொரியும் பசுக்கூட்டங்கள் பல ஆற்ற படைத்த செல்வன் கருதப்பட்டு அவனுக்கு மாறான நற்செல்வன் இந்தப் பாட்டில் பாராட்டப் பெறுகின்றான்.

'மனத்துக்கினியான்'
இராமனை நேரில் கண்டும் அவனிடம் மனம் பறி கொடுக்காமல் இருக்கும் வானர வீரர்கள் நாற்திசையிலும் சென்று சீதா பிராட்டியைத் தேடும் பணியில் ஈடுபடுத்தும் காலை திருவேங்கட மலை பக்கம் செல்ல வேண்டாம் என்று சுக்ரீவன் எச்சரிக்கை செய்ததாக கம்பநாட்டாழ்வான் கூறுவான். (கிட்.காண். நாடவிட்ட படலம் 29 காண்க). ஏனெனில், '*இன்றிப் போக இரு வினையும் கெடுத்து ஒன்றி யாக்கை புகாமை உய்யக்கொள்வான் நின்றவேங்கடம்*' (திருவாய். 9-3-8) என்ற ஆழ்வார் வாக்கினை அடியொற்றி அந்தத் திருமலையப்பனிடம் மனம் பறி கொடுத்து இராம காரியத்தை மறக்கச் செய்யும் மனத்துக்கினியான் அவன்.

மேலும், '*புணரா நின்ற மரமேழ் அன்றெய்த ஒருவில் வலவா*' (*திருவாய். 6-10-5*)என்கிற நம்மாழ்வார் வாக்கினை அடியொற்றி ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்திரத்தில் '*அபிராம குணாகர தாசரதே*' என்று ஸ்ரீப்ரதிவாதி பயங்கரம் அண்ணா ஸ்வாமி அனுபவித்தபடி திருமலையப்பனே ஸ்ரீராமனாக திருவவதரித்தருளினதாகக் கருதலாம்.

'*வேடார் திருவேங்கடம் மேய விளக்கு*' (*திருமொழி* 4-7-5) என்றும் '*வேங்கடம் மேவிய வேத நல் விளக்கு*' (*திருமொழி* 4-3-8) என்றும சொல்லப்படுகிற திருமலையில் '*மின்னார் முகில் சேர் திருவேங்கடம்*'' (திருமொழி 1-10-6) என்கிறபடியே திருமாமகள் கேள்வனாகிய தேவனை' அனைத்தில்லத்தாரும் அறிந்து கொண்டாட எழுந்தருள என்று வேண்டுகிறாள்.

## 8. பதின்மூன்றாம் பாட்டு: ‘புள்ளின்வாய்’
## திருக்குடந்தை திவ்யதேசப் பிராட்டி

'*செழுங்கொழும் பெரும்பனி பொழியும்*' வடக்குத் திருமலையில் நிலையார நின்றான்தன் பிராட்டியைத் துயிலெழுப்பிய பின் தனது பெரிய தகப்பனாரான திருமழிசைப்பிரான் ஏரார் கோலம் திகழத் திருக்குடந்தையில் கிடந்த திருக்கோலம் காண ஏகினாற்போல் ஸ்ரீ ஆண்டாளும் பதின் மூன்றாம் பாட்டில் திருக்குடந்தை அமுதனின் திவ்யமஹிஷியான கோமளவல்லித் தாயாரைத் துயிலெழுப்ப முற்படுகிறாள்.

'போதரிக்கண்ணினாய்!' என்றும் 'பாவாய்!' என்றும் உள்ள விளிகள் மற்ற திவ்ய தேச மஹிஷிகளுக்கும் பொருந்தியிருக்க ஈண்டு 'குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே .... கள்ளம் தவிர்' என்பதை நோக்குங்கால் திருக்குடந்தை திவ்யதேசத்தே பொற்றாமரைக் கயக்கரையிலே கோயில் கொண்டுள்ள கோமளவல்லித் தாயார் விஷயமாகவே இவ்விளிகள் அருளிச்செய்துள்ள தாக எண்ண வேண்டியதாகிறது.

கீழ் மூன்று பாட்டுக்களால் கிழக்கு மேற்கு வடக்கு திக்கில் குடிகொண்டுள்ள, முறையே திருக்கண்ணபுரத்தம்மான், திருஅரங்கன் மற்றும் திருவேங்கடவன் பிராட்டிமாரைத் துயிலெழுப்பின பிறகு தெற்கில் குடிகொண்டுள்ள அழகரின் பிராட்டியைத் துயிலெழுப்பச் செல்லாமல் இடையில் இருக்கும் அமுதனின் பிராட்டியைத் துயிலெழுப்புவதன் காரணம் என்ன என்று ஆராய வேண்டும்.

அன்றொரு நாள் பிருகு முனிவரின் செயலால் வருந்தி தான் நித்யவாசம் செய்துகொன்டிருந்த மாலவன் திருமார்பை விட்டுப் பிரிந்த ஸ்ரீதேவித் தாயார் பூவுலகில் ஓரிடத்தில் மறைந்து வாசம் செய்து கொண்டிருக்கையில் கலியுகத்தில் திருமலையில் எம்பெருமான் ஸ்ரீநிவாசனாக அவதாரம் செய்திருந்தான்.

முன்பு ஸ்ரீராமாவதாரத்தில் , ஏக பத்னி விரதநான எம்பெருமான் தன்னை மணம் புரியத் தவம் மேற்கொண்ட குசத்துவஜ ரிஷியின் புதல்வி யான வேதவல்லியை மற்றொரு அவதாரத்தில் திருமணம் செய்துகொள்வதாக வரமளித் திருந்தான். அதன்படியே அவ்வமயம் ஆகாச ராஜனின் புதல்வியாக வேதவல்லி பிறந்து பத்மாவதியெனும் திருநாமத்துடன் வளர்ந்திருக்க அவளைத் திருமணம் புரிந்து கொள்கிறான்.

அதைக் கேள்விப்பட்டு ஸ்ரீதேவி மிக்க சீற்றத்துடன் திருமலை நோக்கி வருகிறாள். அவ்வாறு ஸ்ரீதேவி வருவதை அறிந்த ஸ்ரீநிவாசன் திருக்குடந்தை நகர் வந்து ஒரு பாதாள குகையில் குடியேறினார்.

அங்கு வந்த ஸ்ரீதேவியும் எம்பெருமானைத் திருமணம்செய்து கொள்ளும் பொருட்டுத் தவமிருக்க வேண்டி அங்கிருந்த பொற்றாமரைக் குளத்தில் சிறு பெண் குழந்தையாக அவதாரம் செய்கிறாள்.

இந்நிலையில் இராமாவதாரத்தில் எம்பெருமான் வீடணனுக்களித்த ப்ரணவாக்ருதி விமானத்தின் மற்றொரு பிரிவான வைதீக விமானத்தில் சார்ங்கபாணியாக எம்பெருமான் திருக்குடந்தையில் கோயில் கொள்கிறான். திவ்யதம்பதிகளிடத்து தான் செய்த அபசாரத்திற்கு வருந்தி ப்ருகு முனிவரும் ஹேம ரிஷி எனும் பெயருடன் இந்த திவ்யதேசத்திற்கு வந்து பொற்றாமரைக் குளத்தில் அவதரித்திருந்த பிராட்டியை கோமளவல்லி எனும் திருநாமமிட்டு வளர்த்து எம்பெருமான் சார்ங்கபாணிக்கு திருமணம் செய்து கொடுக்கிறார். ஆக திருமகள் பொருட்டே அரங்கனும் ஸ்ரீநிவாசனும் குடியேறின இந்த திவ்யதேச பிராட்டியான கோமளவல்லி நாச்சியாரைத் துயிலெழுப்புகிறாள்.

'போதரிக்கண்ணி'
கொந்தார் பைம்பொழில் சூழ்ந்துள்ளதாய் 'கொங்கார் சோலை' 'சாலிவேலி தண்வயல் தடங்கிடக்கும்' பூம்பொழிலும்கொண்டு, 'என்றும் பொன்னித் தடங்கொண்ட தாமரை சூழும் தண்பூங்குடந்தை' யாதலால், தவமியற்றும் காலத்தே தூமலர்கள் துவளற ஆய்ந்து கொண் டேத்தினமையால் அந்த பூக்களைப் போன்றே இவள் கண்களும் உருமாறினமையால் போதரிக்கண்ணி ஆயினள்.

'போதரிக்கண்ணினாய்' --
'போது' என்று பூவையும், 'அரி' என்று மானையும் சொல்லி பூவையும் மானின் கண்ணையும் ஒத்த கண்ணழகு படைத்தவள். '*கற்றுப் பிணை மலர்க்கண்*' (திரு. விரு 65) என்று ஆழ்வார் அருளிச்செய்தவாறு கன்றான மானின் மலர்போலே இருக்கிற கண் என்றுமாம். கண்ணனுடைய கண்ணிலே அகப்பட்டு அவன்தன் கருமை நிறம் இவளது கண்ணிலே ஏறப்பெற்ற கண்ணழகு படைத்தவள்.

அரி என்று சத்ருவாய் பூவைப் போட்டியில் எதிரிட்டு வெல்லும் கண் என்றுமாம். '*காவியும் நீலமும் வேலுங் கயலும் பல பல வென்று.....தூவியம் பேடையன்னாள் கண்களாய துணை மலரே*' *(திரு.விரு 67)* என்று ஆழ்வார் அருளிச்செய்தவாறே அழகிய இறகுகளையுடைய அன்னம் போன்ற நடையழகை உடைய இந்த பிராட்டியின் இணைமலர்க் கண்கள் தம் கடைக்கண் சிவப்பினால் செங்கழுநீர்ப்பூவையும், கருமையால் கருநெய்தலையும், நோக்கு கின்ற கூர்மையால் வேலாயுதத்தையும், ஆகார சௌந்தர்யத்தினால் கயல்மீன்களையும், இப்படியான தன் மற்றுமுள்ள குணங்களினால் மற்ற பொருட்களையும் அடையப்புக்கவிடம் புக்கு வென்றது.

இதனால் பிராட்டியின் ஜ்ஞானஸ்ரீ பேசப்பட்டது. இது கொண்டு ஒப்புயர்வற்ற உன் துணைமலர்க் கண்கள் எனும் ஓரவயவத்தாலே அவனையும் கூட மயக்கவல்வளாயிற்றே?

அதனை யொழிந்து அந்த மரதக மணித்தடத்தே எம்மையும் சேர்த்துக்கொண்டு குள்ளக்குளிரக் குடைந்து நீராடாமல் படுத்துறங்க வல்லையோ என்கிறார்கள். உன் கைவளை பற்றித் தனித்து அழைத்துச் செல்கிற கள்வனின் கள்ளத்தனம் உன்னிடத்தில் ஏறிட்டதோ என்கிறார்கள்.

இன்று மனோரதம் கைகூடினமையால் 'பள்ளிக் கிடத்தியோ' எங்கள் மனோரதம் கைகூட வேண்டுமே "கள்ளம்தவிர்". ஆராவமுதத்தை எங்களுடனும் சேர்ந்து அனுபவிக்க எண்ணாமல் தனித்து அனுபவிக்கும் கள்ளம் தவிர் என்கிறாள். அவர்கள் வேண்டியவாறே அன்று கலந்து நீராடியதைக் குறிக்கும் வண்ணம் இற்றை அளவும் தைத்திங்கள் பிறந்த அடுத்த நாள் கனுவன்று விஜயவல்லி சீதாபிராட்டியுடன் பொற்றாமரைக் குளத்தில் பிடி வைத்து நீராட்டம் காண்கிறாள்.

## *9.* ***பதினான்காம் பாட்டு: 'உங்கள் புழக்கடை'***

## திருப்பரமபத திவ்யதேசப் பிராட்டி

கீழ் பதின்மூன்றாம் பாட்டில் துயிலுணர்ந்த கோமளவல்லித் தாயார் கருவறையில் பெருமாளும் பிராட்டியும் எழுந்தருளி யிருக்கும் திவ்யதேச தரிசனத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆங்கே, உத்யோக ஸயனம் புரிந்தவாறே திகழக்கிடந்தான் திருவடிவாரத்தில் ஸப்த நதிகளும் பூதேவியும் துவய மந்திரத்தின் முற்கூற்றை (ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே) அனுஸந்தித்தபடி எழுந்தருளியிருக்க, துவய மந்திரத்தின் பிற்கூற்றை (ஸ்ரீமதே நாராயணாய நம:) நினைவு படுத்தும் வகையில் திருமுடியின் வலப்பக்கம் பெரியபிராட்டி உடனமர்ந்து இருவருமான சேர்த்தியில் கைங்கர்ய ரஸம் காண பணித்திருக்கும் அந்த திவ்ய தரிசனம் சேவிக்கப் பெற்றார் மாக வைகுந்தத்தே 'குடந்தை எங்கோவலன் குடியடியார்' (திரு. வாய். 10-9-7) இவர் என்று வைகுந்தத்தமரரும் முனிவரும் வாழ்த்தி வரவேற்று துதிபாடுவது ஸ்ரீ ஆண்டாள் நெஞ்சில் நிழலாட பரமபதத்தே எழுந்தருளி இருக்கும் பெரிய பிராட்டியாரை நங்காய் என்று விளித்து அழைக்கிறாள்.

அன்றிக்கே, இங்குள்ளோர் எண்ணியவுடன் பரமபதம் செல்ல முடியாவிட்டாலும் அங்குள்ளோர் அவன் திருவுள்ளக் கருத்தினடியாக இங்கு வந்து பிறக்கலாமே. வைகுந்தத்தமரரும் முநிவருமே கண்ணனின் பால லீலைகளை நேரில் அனுபவிக்க ஆயர்களாகப் பிறந்ததாகச் சொல்வதுண்டே. பெரிய பிராட்டியாரும் அவ்வண்ணம் இங்கோர் ஆயர் சிறுமியாக தோன்றியிருக்க அவளைத் துயிலெழுப்புகிறாள் என்றும் கருதலாம்.

இந்நிலவுலகில் எம்பெருமானின் அர்ச்சாவதாரக் கருத்தைச் சிறப்பிக்க தானம் வேணடுருக் கொண்டு அவதரிக்கும் திருமகள், புரிந்தனர.

அவனுக்கு ஆயர் சிறுமியர் மேற்கொள்ளவிருக்கும் நோன்பில் தானும் உடனிருந்து அவர்கள் காரியத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கும் பொருட்டு, தன் ஸ்வரூப ரூப குண விபூதிகளில் சற்றும் குறையாமல் பிறந்திருந்தாள் போலும். அவளை இன்னார் என்று கண்டுகொண்ட ஸ்ரீ ஆண்டாள் அவளைத் துயிலெழுப்புகிறாள்.

'த்ரிபாத் விபூதி'யான பரமபதத்தில் கால்பங்கே பூவுலகம். ஆதலின் இவ்வுலகம் பரமபதத்துக்குப் புழக்கடைத் தோட்டம் போலுள்ளது. 'புரந்தரன் செய்த நாங்கை' (பெரிய திரு. 3-6-8) என்கிற படியே சுவர்க்கத்தில் உண்டான எல்லா நலன்களும் பூமிக்கும் உண்டாக வேண்டும் பொருட்டு காண்டற்கினிய பூக்களை உடைய சோலைகளாலே சூழப்பட்டதாய் இந்திரனாலே அமைக்கப்பட்ட திருநாங்கூரிலே திருக்காவளம் பாடியிலே ஸ்ரீருக்மிணி ஸத்யபாமா ஸமேத ஸ்ரீகோபாலன் அடியார்களுக்குக் கற்பக மரமாக எல்லாருக்கும் ஒரு சேர உதவுதற் பொருட்டு நிலையாக எழுந்தருளியுள்ளது போல் அன்று திருவாய்ப்பாடி அருகே திருப்பரமபதக் கொப்பாக ஒரு திவ்யதேசம் விளங்கியிருக்க அந்த திவ்யதேசப் பிராட்டியை எழுப்பினார்கள் போலும்.

'எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்'
எம் பெரிய தகப்பனார் நம்மாழ்வார் எம்பெருமான்பால் எங்களுக்கு வேட்கை எழுப்பிய பின்னர் அவனை நாடிச் செல்லும் எங்கள்பால் ஏதேனும் குற்றம் கண்டு வெறுத்து எங்கள் கைங்கர்யம் கொள்ளாமல் விடக்கூடும். (கறவைகள் பாசுரத்தில் தெரிவித்த வண்ணம்) அவனிடம் குற்றம் ஆவது என்? இந்த உலகில் பிறந்திருக்கச்செய்தே குற்றம் செய்யாதவர் எவர்? எனது பரிகரமான இவர் திறத்து உனது ஸ்வாதந்திரியத்தைக் கைவிட்டு காரணம் இன்னதென்று சொல்ல மாட்டாத உன் பேரருள் புரிந்து இவர்கள் குற்றேவல் கொள்ளவேண்டும் என்று அவன் வெருவாமைக்கு அவனோடே மறுதலைத்துப் பேசி எங்கள்பால்

அவனுக்கு மாலேற்ற வல்லை நீயே அன்றோ? ஆதலின் நீ எழுந்திராய் என்கிறார்கள்.

பூவின்மிசை நங்கைக்கும் இவளுக்கும் வேற்றுமை காண்பதரிதால் 'நங்காய்' என்று அழைக்கிறாள்.

'நங்காய்'
பரிபூர்ணனான பரவாசுதேவ நம்பிக்கு ஏற்ற பூர்த்தி 'உனக்கேற்கும் கோலமலர்ப் பாவைக்கு அன்பா' என்கிறபடியே இவள் திறத்து அவனது ஸ்வரூப ரூப விபவங்கள் மூன்றும் நிறைந்திருத்தலால் 'நங்காய்' என்று அழைக் கிறாள். குணபூர்த்தி உடைய ஆண் - நம்பி, பெண் - நங்கை)

'நாணாதாய்' 'நாவுடையாய்' என்று மற்றுமிரு ஒற்றுமைகள் காட்டுகிறாள்.

'நாணாதாய்' பரமபதத்தே பர்யங்க வித்தையில் இருவருமான சேர்த்தியிலே உங்கள் அபிமத பிள்ளைகள் உங்கள் படுக்கையில் ஏறித் துகைக்க நாணாதாய் என்று சொல்கிறார்கள்.

'நாவுடையாய்' பாங்காக உன் திருவடியைப் பற்றி நிற்கும் எங்கள் எழில் சேனைமுதல்வர்க்கு ஹிதமான துவய மந்த்ரத்தை உபதேசித்தவளே. அன்றிக்கே உமது தொட்டில் பிள்ளையாகவே வளர்ந்த ஸ்ரீபராசர பட்டர் நம்பெருமாள் ஸ்ரீரங்கராஜர் என்று பர்த்தாவின் பெயர் சொல்வதை நாவுக்கு அகாரியமாகக் கருதி 'அழகிய மணவாளப் பெருமாள்' என்கிற அசாதாரணமான திருநாமம் செப்பப் பழகவிட்டவளே என்கிறார்களாகவுமாம்.

பரமபதத்தே நித்யர்களும் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையாராக இருக்கச் செய்தே, பங்கயப்பூவிற் பிறந்த உன்னையே நாளும் பார்த்தனுபவிக்கும் எம்பெருமானின் திருக்கண்கள் பங்கயக்கண்ணாக சிவப்பேறியிருப்பதுபோல் நித்யர்கட்கு இல்லை. ஆதலின் அந்த பங்கயக்கண்ணானைப் பாட எழுந்தருள பிரார்த்திக்கிறார்கள்.

## 10. பதினைந்தாம் பாட்டு: "எல்லேஇளங்கிளியே"
## திருமாலிருஞ்சோலைமலை திவ்யதேசப் பிராட்டி

இதுவரை ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்துள்ள திருப்பாவை யில் ஆறாம் பாட்டு தொடக்கமாக பதினைந்தாம் பாட்டு முடிவாக ஸ்ரீ ஆண்டாள் தான் அருளிச்செய்த நாச்சியார் திருமொழியில் மங்களாசாசனம் செய்தருளின பதினோரு திவ்யதேசங்களுள், ஸ்ரீவில்லிபுத்தூர் நீங்கலாக மற்ற பத்து திவ்யதேச பிராட்டிமாரைத் துயி லெழுப்புகிறாள் என்ற நோக்கில் கீழ் ஒன்பது பாசுரங்களில் எந்தெந்த திவ்யதேச பிராட்டியைத் துயிலெழுப்புவதாகக் கருத வாய்ப்புண்டு என்று பார்த்து வந்தோம்.

இனி இறுதியாக யுள்ள பதினைந்தாம் பாட்டில் திருமாலிருஞ்சோலை மலை திவ்ய தேசத்தில் பஞ்சாயுத ஸஹிதனாய் தென்னானையாய்த் திகழும் சுந்தரராஜன் என்றும், கள்ளழகர் என்றும் பரமஸ்வாமி என்றும் அழைக்கப்படுகின்ற எம்பெருமானின் பட்டமஹிஷியான கல்யாண சுந்தரவல்லியைத் துயிலெழுப்புகிறாள் என்பதைக் காண்போம்.

எழுப்பும் பென்பிள்ளையான ஸ்ரீ ஆண்டாள் மதிப்புடைய சோலைக் கிளி. எழுப்பப்படும் பெண்பிள்ளையான பிராட்டியோ பெருமதிப்புடைய மாலிருஞ் சோலைமலை யில் துயிலும் இளங்கிளி.

ஸ்ரீவானமாமலை ஜீயர் பத்துப் பாடல்களினால் வாக்ய குருபரம்பரை க்ரமத்தில் அமைந்துள்ள பகவத் கைங்கர்யபரர்களைத் துயிலெழுப்பு வதாக அனுஸந்தித்த அளவில், இப்பாட்டால் 'ஸ்ரீமதே சடகோபாய நம:' என்னும் அர்த்தம் தொனிப்பதாக அருளிச் செய்வர்.

ஆதலின் தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியா (திருவாய் 4-8-5) ளான சுந்தரகாண்டத்துச் சுடர்கொடியும், சுடர்முடியண்ணல் தாள் பணியும் 'அணி மழலைக் கிளிமொழியா' (திருவாய் 4-8-5)

ளான நம்மாழ்வாரும் சேர்ந்தே இப்பாசுரம் தன்னில் துயிலுணர்த்தப்படுகிறார்கள் என்று கருத வாய்ப்பாகிறது. 'காவியங்கண்ணி எண்ணில் கடிமாமலர்ப் பாவையொப்பா'ளாதலின் சுந்தர வல்லி நாச்சியாரையும் நம்மாழ்வாரையும் ஒரு சேரே வைத்து இப்பாட்டில் உள்ள சொற்களுக்குப் பொருள் எவ்வாறு அவர்களைக் குறிப்பிடுகின்றன என்பதை அனுபவிக்கலாம்.

திருமாலிருஞ் சோலை மலை விஷயமாக தாமருளிச் செய்த திருவாய் மொழியினை பிராட்டி சந்நிதியில் ஆழ்வார் அதிகாலை வேளையில் இந்தளம் என்கிற பண்ணில் இசைத்துப் பாடி அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

திருமாலிருஞ்சோலைமலை விஷயமாக ஆழ்வார் அருளிச்செய்துள்ள நான்கு பதிகங் களில் 'முடிச்சோதியாய்' (3-1) என்கிற பதிகமும் மற்றும் 'திருமாலிருஞ்சோலைமலை' பதிகத்தில் (10-8-1, 6) ஆகிய இரண்டு பாசுரங்களும் காலை 6 மணி முதல் 9 மணி வரையான முதல் ஜாமத்தில் பாட வேண்டிய இந்தளம் என்கிற பண்ணில் அமைந்துள்ளது. (மற்ற பாசுரங்களான கிளரொளி (2-10) நாட்டம் என்கிற பண்ணிலும், முந்நீர் (3-2) சீகாமரம் என்கிற பண்ணிலும் , செஞ்சொல் (10-7) தத்கேசி என்கிற பண்ணிலும் அமைந்துளனவாகத் திருச்சித்திரகூடம் முனைவர் ஸ்ரீ உ வே அ. வெ. ரங்காச்சாரியார் ஸ்வாமி அவர் தொகுத்துள்ள 'ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவப் பிரகாசிகை" எனும் நூலில் 'திருவாய்மொழியில் பண்கள்' என்ற தலைப்பில் உள்ள அத்யாயம் 19ல் காட்டியுள்ளார்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்துள்ள நாச்சியார் திருமொழியில் திருமாலிருஞ்சோலை மலை விஷயமாக பாடிய ஒன்பதாம் திருமொழியில் 8 ஆம் பாட்டில் '*காலையெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவு சொல்லி மருள்*'பாடுவதைக் குறிப்பிட்டுள்ளாள். ஆங்கே 'மருள்- இந்தளம் என்கிற பண்ணைப் பாடுகிறது' என்று உரை வரைகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

இவ்வாறு பிராட்டியும் ஆழ்வாரும் இந்தளம் பண்ணைப் பாடி அனுபவித்துக் கொண்டிருக்க அதனினிமையிலாழ்ந்து செவிமடுத்த ஆண்டாள் அவர்களைக் குறித்து 'எல்லே இளங்கிளியே' என்றழைத்தனள் போலும்.

அவ்வாறு ஆண்டாள் அழைப்பது தங்கள் அனுபவத்திற்குத் தடையாயிருப்பதால் 'சில் என்று அழையேன்மின்' என்று மறுமொழி வருகிறது.

குன்றம் என்றாலே '*சில்லு சில் என்று ஒல் அறா*' (*திருமொழி* 1-7-9) என்கிற படியே மலைத்தேனைப் பருகத் துடிக்கும் சில் வீடு என்ற வண்டினம் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் போலும். அந்த வண்டினம்போல் நங்கை மீர் நும்மின்குரல் திருமாலிருஞ்சோலைமலை விஷயமான அனுபவத்திற்கு இடையூறாக இருப்பதால் 'அழையேன்மின் போதர்கின்றேன்' என்கிறாள்.

ஆழ்வாரும் '*எம்மைச் சேர்விக்கும்வண்டுகளே*' என்றும் '*வண்டுகளோ வம்மின்*' (திருவிருத்தம் 54,55) என்று பேசியிருக்கிறவாறு இவ்விடத்தும் வீட்டின் வாசலில் இருப்பவர்களின் பேச்சை வண்டு களின் ரீங்காரமாகக் கொண்டாடிப் பேசுகிறார்.

"உனக்கென்ன வேறுடையை"
நாங்கள் முன்பு ஸ்ரீரங்க நாயகியை பொற்கொடி என்றது உன்னிடத்தில் அன்றோ பலிக்கக் காண் கிறோம். '*ஆரூட ஸ்ரீ:*' என்கிற படியே அவன் வலமார்பினில் ஏறி வீற்றிருந்து சுந்தரவல்லி யான நீ பொற்கொடி போல் அவன் திண்தோளைக் கொழு கொம்பாகப் பற்றி விளையாடும் உன்னாலன்றோ அவனுக்கு 'ஏறு திருவுடையான்' என்றும் 'சுந்தரத் தோளுடையான்' என்றும் திருநாமம் வாய்க்கப் பெற்றுள்ளது. ஆதலின் அவனுக்கு ஜகத்காரணன் என்கிற விசேஷணத்துடன் ஸ்ரீவல்லபன் என்கிற விசேஷணத்தாலு மன்றோ நாங்கள் அவனைப் பற்றுவது.

ஆழ்வார் எங்கும் நாச்சியார் போன்று அமர்ந்து சேவை சாதிக்கிறார். '*ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் அவன் பேரும் தார்களுமே பிதற்ற*' (திருவாய் 6-7-2) வைத்தவரைப் பின்பற்றி ஸ்ரீ ஆண்டாளும் இந்த திவ்யதேசத்தில் அமர்ந்து சேவை சாதிக்கிறார்.

கீழே எட்டாம் பாட்டில் கூறியதுபோல் மிக்குள்ள பிள்ளைகளும் போந்தாரோ என்று பிராட்டி வினவ உங்கள் திருவடிநிலையான ஆழ்வாரை (ஸ்ரீ சடகோபரை) எழுந்தருளப் பண்ணி எங்கள் சிரந் தொட்டு எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டுகிறாள். எங்கள் சிரம் மீது அவர் கரம் தொட்டு ஆசி கூற மற்றை நம் காமங்கள் மாற்றும் மாயனைத் தூயோமாய் வந்து தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் எங்கள் எண்ணம் ஈடேறப் பெற்றுய்வோம் என்கிறார்களாகவுமாம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## *நிறைவுரை*



ஆக, இவ்வண்ணம் அடியேன் முன்னோர் மொழிந்த வசனங்கள் தன்னை கொண்டு பின் ஓர்ந்து ஆராய்ந்துத் தெளிந்துத் தென்புதுவைப் பிராட்டி ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நன்னாளில் ஞாலம் புகழ படிந்து நீராட தன்னுடன் தோழிமாராக அழைத்துச் சென்ற திவ்யதேசப் பிராட்டிமார்கள் பற்றி விண்ணப்பம் செய்து இந்நூலைத் தலைக்கட்டுகிறேன்.

வாசக தோஷம் க்ஷமிக்கப் பிரார்த்தித்து அன்பர்கள் தாள் பணியும் அடியேன் மாறனடிப்பொடி மணியரங்கன் தாஸன்
Koil Komandur Elayavalli Bashyam Rangarajan